
தமிழ்
ஈழத்தில்
கே.எஸ்.ஏ. கபூர்

1991.06.07.

# தமிழ் ஈழத்தில்—————எமது தோழர்கள்

ஆசிரியர்:




3.557

விலை: ரூபா 2/-

புத்தகசாலை
J. M. C
12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்

வெளியீடு:

பி. அருள்சீலன் பெர்னாட்டோ
தலைவர்
இளைஞர் பேரவை
பேசாலைக் கிளை — பேசாலை

முதற் பதிப்பு: ஜனவரி 1978

ஆசிரியன் நூல் வரிசை 6

## சமர்ப்பணம்

மன்னார் மாவட்டத்தின் மாண்புமிகு தலைவன் — வழிகாட்டி, அஞ்சா நெஞ்சன், நல்லவர், வல்லவர் அமரர் வி. ஏ. அழகக்கோன் அவர்களுக்குச் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி இதைச் சமர்ப்பணமாக்கி— அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

## இதனுள்ளே:-


- லெனினிஸ லீலைகள் 1
- அரசியல் வியபிசாரிகள் 8
- லெனின் அன்று ஒரு மார்க்ஸ்வாதியல்ல 17
- விடுதலைப் புரட்சியே பொதுவுடைமையின் வித்து 25
- சுண்டைக்காய் நாடுகள் 35
- உங்களையே கேட்கின்றோம் 40


## இந் நூலாசிரியரின் பிற நூல்கள்:-

- சிங்களமே சீறிப் பார்
- ஒழிக ஒற்றை ஆட்சி
- இரத்தச் சுவடு
- தமிழினத்தின் விடுதலைக் குரல்
- இலங்கையில் இன முழக்கம்

# எனது ஆசி

ஈழம் வாழ் தமிழ்ப் பெருமக்களின் விடுதலைக் குரலுக்கு விடிவு காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எமது தன்னாட்சி உணர்ச்சிக்கும் தமிழ் உணர்வுக்கும் ஒரு புத்துணர்ச்சி ஊட்டவும் அதன் மூலம் புதுப்பொலிவைப் பெறவும் இந் நூல் ஒரு வழித்துணையாக அமைகிறது என்பதனை உணரும்போது எம் இனத்தின் விடுதலை வேட்கையே மென்மேலும் எம்மை ஆட்கொள்ளுகிறது.

தமிழ்ப் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டிய கம்யூனிஸவாதிகளின் அரசியல் சாணக்கியமற்ற கொள்கையை எமது தீரமுள்ள விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. சமதர்மத்தின் பேரால் சிறுபான்மையோரின் உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு வருவதுதான் கம்யூனிஸ சித்தாந்தம் எனத் தவறான விளக்கத்துடனும், போலி அரசியல் அறிவுடனும் நம் இனத்தினூடாக ஊடுருவல் நடாத்தும் லெனினிஸத் தோழர்களுக்கு ஒரு சவால் விடப்பட்டுள்ளது. இந் நூல் தமிழ்ப் பேசும் வெகுஜனங்களின் உணர்ச்சிக்கும் உத்வேகத்துக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக அமைய வேண்டுமென ஆசிக்கின்றேன். உலகில் தோன்றும் சமூக வாதப் பிரச்சனைகளுக்கு லெனினிஸச் சித்தாந்தத்தின் அடிப்படையில் தீர்வு கண்டுவரும் இப் புதுயுகத்தில் நம் நாட்டின் லெனினிஸவாதிகள் புனிதத்துவமும் அமரத்துவமும் பெற்ற மேலாந்தரமான கொள்கைக்கும் களங்கம் கற்பித்து வருகிறார்கள், என்பதனைச் சரியான வரலாற்று ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளார் இந் நூலாசிரியர்.

தமிழ் பேசும் அனைவரினதும் உள்ளங்களிலும் இந் நூலாசிரியரின் எண்ணக் கருவூலங்கள் தனியான ஓர் இடத்

தைப் பெறும் என்பது திண்ணம். பிரான்ஸிலே நடந்த புரட்சி வெற்றி பெறுவதற்கு வால்டேர், ரூஸோ, மொான்டெஸ்கியூ போன்ற திர்க்கதரிசன எழுத்தாளர்களின் வலிமை பெற்ற எழுத்தோவியங்கள் எவ்வாறு மறுமலர்ச்சிச் சிந்தனையை உண்டுபண்ணியதோ அதுபோன்றே இதுவரை ஆறுக்கும் அதிகமான உணர்ச்சிகளைத் தூண்டும் புத்தகங்களைப் படைத்த எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த கே. எஸ். ஏ. கபூர் அவர்களின் தொகுப்புக்குச் சக்தி உண்டு எனவும், அவரின் பேனுமுனைக்கு வலிமை உண்டு எனவும் ஆணித்தரமாகக் கூறுவேன். "வாள் வேண்டாம் எனக்கு; கொண்டு வா பேனாவை. சாதித்துக் காட்டுகிறேன்" என்றான் ஓர் அறிஞர் பெருமகன். அவரின் பேருரைக்கும், சூளுரைக்கும் இவரின் படைப்பில் உயிர் கொடுக்கப்பட்டுள்ளது. லெனினிஸத் தோழர்களும், மகான் லெனின் கூறிய இன விடுதலை என்ற கருவுக்கு சமதர்மச் சித்தாந்தத்தின்படி உருக்கொடுக்க எம் அணியில் திரள்வார்களென நம்புகின்றேன்.

— வணக்கம் —

இவ்வண்ணம்

வவுனியா,
30, ஒக்டோபர், 1977.

தா. சிவசிதம்பரம்
தே. பே. பிரதிநிதி

## அட்டைப்பட ஓவியம்

இப் புத்தகத்திற்காகச் சிரமம் பாராது பொறுப்போடும் - உணர்ச்சியோடும் மேலுறைக்கான படத்தைத் திறம்பட அமைத்துத்தந்த எருக்கலம்பிட்டியைச் சார்ந்த நண்பர் என். முகம்மதலி அவர்களுக்குத் தமிழ் தாயின் பெயரால் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

— நன்றி —

ஆசிரியர்

வெற்றிப்பணி

வெளியீட்டாளரின்

# வெற்றிப்பணி

"தமிழ் ஈழத்தில் எமது தோழர்கள்" என்ற இப் புத்தகத்தின் வெளியீட்டாளரான எமது தமிழன்னையின் தவப்புதல்வன் - எனது அன்புக்குரிய அருள்சீலன் பெர்னுட்டோ அவர்களை நீண்ட பல காலமாகவே நான் நன்கறிந்திருக்கின்றேன். கடந்த பல ஆண்டுகளாக எமது தமிழ்த்தாயின் விடிவுக்காக — வாழ்வுக்காக அவர் செய்து வந்த பணியையும் தியாகத்தையும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்றியோடு நன்கு அறிந்து வைத்திருக்கின்றது. தமிழ்த் தாயின் விடுதலைக்காகக் கடந்த காலங்களில் நாம் நடாத்தி வந்த தீவிரப் போராட்டங்களில், குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் நண்பன் அருள்சீலன் எடுத்து வந்த பங்கு விடுதலை காண விரைந்து நிற்கும் தமிழ்ப்பற்று பெரும் பாராட்டுக்குரியதாகும்.

மன்னார் மாவட்டத்தில் இயக்கப் பற்ருேடு இளைஞர்களை வழிநடத்திச் செல்லும் துடிப்புள்ள ஒரு இளைஞர் சமுதாய வழிகாட்டியாக மட்டுமல்லாது - மலர்ந்து வரும் தமிழ் ஈழம் காண இரத்தம், வியர்வை, கண்ணீருடன் தன்னையே ஈர்ந்து நிற்கும் திரு அருள்சீலனின் இப்பெரும் முயற்சி கண்டு தமிழ்த்தாய் பூரித்து நிற்கின்ருள். அதனுல் தான் மன்னார் மாவட்ட இளைஞர்கள் இவரின் தலைமையில் நம்பிக்கை கொண்டு வழிபட்டு நிற்கின்ருர்கள்.

ஏன், அன்று நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் போது கூட்டணி வேட்பாளர் திரு. சூசைதாசன் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, இவர் மின் வேகத்தில்

ஆற்றிய பணியும் - வாரி இறைத்த பணமும் இவரின் விடுதலை வேட்கையை எமக்கெல்லாம் விரைந்து காட்டியது. தன்னுடைய தொழிலைப்பற்றியே சிந்தித்துச் செயல்பட நேரமில்லாத நிலையிலிருந்தும்கூட, அவரின் பெரும்பகுதியான சிந்தனையும் — எண்ணமும் சதா தமிழ்த்தாயின் விடுதலையைச் சுற்றி வலம் வருவதையே தினமும் எம்மால் காணக்கூடியதாக இருக்கும்.

அதனால்தான் நினைக்கின்றேன். வாய் பிழந்து நிற்கும் பீரங்கிகளுக்கு முன்னே நெஞ்சு கொடுத்துச் சவக்குழி காண விரைந்து நிற்கும் இளைஞர் அணியில் நண்பர் அருள்சீலன் தனி அணிக்குரியவரென்று!

1973ம் ஆண்டு இந்நூலாசிரியரின் தமிழினத்தின் விடுதலைக் குரல் என்ற புத்தகத்திற்கு வெளியீட்டாளராக நான் பொறுப்பேற்று, அதனால் பட்ட சிரமங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. அதேபோன்ற ஒரு கஷ்டமான புத்தக வெளியீட்டைப் பொறுப்பேற்று, பல சிரமங்களுக்கு மத்தியில் அதை நூலுருவாக்கி வெளியீடு செய்துவைத்த திரு. அருள்சீலன் பொன்னுட்டோ அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியையும், நல்லாசியையும் தெரிவித்துக்கொள்வதோடு, மேலும் இது போன்று பல செயலுள்ள பணிகளைப் பொறுப்பேற்குமாறும் கேட்கின்றேன் — மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

68, குறசற் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

அன்புள்ள
சி. கதிரவேற்பிள்ளை
தே. பே. உறுப்பினர்

5 - 1 - 1978

றீல் நூல்கள்,

கழி நூல்கள்,

றேந்தைகள்,

பட்டன்கள்,

தலைமுடி வகைகள்,

பாட்டா, **D. I.**, சின்வா,

**D. S. I** சப்பாத்து, சிலிப்பர்கள்

மற்றும் சாப்புச் சாமான்கள்

பெற்றுக் கொள்ளலாம்

இன்றே விஜயம் செய்யுங்கள்!

# நாதன்ஸ்

**17, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 7540

சிறந்ததையே வாங்குங்கள்!

"மணியம்ஸ்" இல் வாங்குங்கள்!

உங்களுக்குத் தேவையான சகலவிதமான

பிடவைத் தினிசுகள்

றெடிமேட் உடைகள்

கூறைச் சேலை வகைகள்

மற்றும்

அழகு சாதனப் பொருட்கள் யாவும்

நிதான விலையில்

பெற்றுக் கொள்ளலாம்

இன்றே விஜயம் செய்யுங்கள்!

# மணியம்ஸ்

**16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 7545



# மகிழ்ச்சியடைகின்றேன்

★ அருள்சிலன் பெர்ணன்டோ

எமது விடுதலை இயக்கத்தின் இளமைக் காலத் தொண்டரான நண்பர் கே. எஸ். ஏ. கபூர் அவர்களை தமிழ்கூறும் நல்லுலகு, கடந்த இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நன்கு அறிந்து தெரிந்து வைத்திருக்கின்றது. சென்ற 1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது, எமது தமிழரசுக் கட்சி அதனை எதிர்த்துக் காலிமுகக் கடற்கரையில், இலங்கை வரலாற்றில் முதற் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தியபோது தனது பிஞ்சு நெஞ்சத்தோடு, அப் போராட்டத்திற் பங்குகொண்டு, அங்கே சிங்களக் காடையர்களால் தாக்குண்டு இரத்தம் சிந்தி வரலாறுகண்ட தியாகி, நண்பர் கபூர் அவர்கள். அன்றுமுதல் இன்றுவரையும் அகில இலங்கை ரீதியாக எம் இயக்கம் நடாத்திவந்த ஒவ்வொரு போராட்டத்திலும் முன்னணித் தொண்டனாக நின்று அவர் ஆற்றி வந்த பணிகள் எமது இயக்கத்தின் நம்பிக்கைகொண்ட வரலாற்றுச் சிறப்புக்குரியனவாகும்.

கடந்த காலங்களில் எத்தனையோ முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழரசை அரசியல் வாசிகசாலையாகப் பயன்படுத்திக்கொண்டு - உயர ஏற உதவிய ஏணியை உதைத்துத் தள்ளிவிட்டு, கட்சியைவிட்டு வெளியேறிய போதும் - நண்பர் கபூர் மட்டும் நிலையாக எமது இயக்கத்தின் கொள்கைகளைத் தம் உள்ளத்தின் ஆழத்திலே குடியிருத்தி அதற்காக இரத்தம் கண்ணீர், வியர்வை ஆகியவைகளைத் தமதாக்கிக் கொண்டி

ருக்கும் தனித்தியாக உணர்வு எல்லோருக்குமே ஏற்பட்டுவிட முடியாது.

இன்று எழுத்துலகிலும் பேச்சு மேடையிலும் யாரையுமே இலகுவாகக் கவரக்கூடியதான, தனக்கென்ற ஒரு தனிவழியை இவர் வகுத்துக்கொண்டிருப்பதனால்தான் இவருக்கென்று இத்துறைகளில் தனிப்புகழே மேலோங்கி நிற்கின்றது. இதைத்தான் கடந்த காலங்களில் இவர் எழுதிய ஆறுக்கும் மேற்பட்ட புத்தகங்களும், சுதந்திரனில் எழுதி வந்த நூற்றுக்கணக்கான கட்டுரைகளும், மேடைகளிலே மக்களுக்கு எடுத்துக்காட்டும் உயர்ந்த அரசியல் விளக்கங்களும் எமக்கு நிரூபித்து நிற்கின்றன. இத்தனை சிறந்ததொரு எமது செயல் துடிப்புள்ள விடுதலை வரலாறு காணும் தியாகியான மதிப்பிற்குரிய கபூர் அவர்களின் இப் புத்தகத்தை வெளியிடுவதற்கு எனக்குக் கிடைத்த இவ்வாய்ப்பையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன் - பெருமைப்படுகின்றேன்.

நன்றி - வணக்கம்

தலைவர்,
த. இ. பே. பேசாலை கிளை,
பேசாலை. 25-9-1977.

அன்புள்ள,
தமிழ்நெஞ்சன்
அருள்சிலன் பெறுணைந்து


வெளிவரக் காத்திருக்கின்றது !

## "தமிழ் ஈழ விடுதலை வரலாறு"

கடந்த 1943 ஆனித் திங்கள் முதல் 1977 புரட்டாதித் திங்கள் வரையும் ஈழத்தமிழினம் கடந்துவந்த துயர்தோய்ந்த
அரசியற் பாதைகளை
தெளிவான விளக்கத்துடனும், ஆதாரங்களுடனும் எழுதப்பட்ட ஒரே வரலாற்றுப் படைப்பு.

# எனதுணர்ச்சி

மக்களின் நினைவுக் கெட்டாத தொன்மைக் காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்றுவரையும் அடைந்துள்ள வெற்றி தோல்விகளையும் - தொல்லை துயரங்களையும் - மேடு பள்ளங்களையும் வரிசைப்படுத்தி முறையாக எடுத்துக்காட்டும் தொடர்கதைதான் நம்மை வளர்த்துவரும் வரலாறு என்பதாகும். மக்களின் கடந்தகால வாழ்க்கைப் பயணம் எப்படி இருந்தது என்பதைச் சுவையோடு விளக்கி நிற்பதே நாம் காணும் வரலாறு. உலகிலுள்ள இனங்கள், மொழிகள், கலைகள் அனைத்தையும் பிரசவத் தாயாக நின்று ஈன்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டிப் போற்றி வளர்த்த தனிப்பெருமை வரலாற்றிற்கே உரியதாகும். இக் காரணத்தினால்தான் உலக வரலாற்றாசிரியர்களெல்லாரும். "அறிவயலின் அன்னை" என்று வரலாற்றுத் தொடரைப் புகழ்பாடிக் கொண்டிருக்கின்றனர்.

அத்தகைய வரலாற்றிலே உள்ள, எமது லெனின் காட்டிய ரஷ்ய சரித்திரத்திலே இருந்து இப்போதைக்குத் தேவையான சிலகுறிப்புக்களை மட்டும் இன்று உங்கள்முன் சமர்ப்பிக்கத் துணிந்திருக்கின்றேன்.

ஆனால் இந்த வரலாற்றுக்கும் - வரலாற்று விற்பன்னர்களின் கண்டுபிடிப்புக்களுக்கும் அகப்படாத நிலையிலுள்ள ஒரு சில இனங்களுள் தமிழும் தமிழினமும் ஒன்று என்பதை விஞ்ஞானத்தால் வியக்கவைக்கும் இந்த உலகமே ஒருமித்து ஒப்புக்கொண்டிருக்கின்றது என்பதை யாருமே மறுக்கமுடியாது. அத்தகைய ஒரு இனம் இன்று தன்னுடைய அரசியல் ஜீவாதார உரிமைகளை நிரந்தரமாக நிலைநாட்டிக் கொள்வதை சோவியத் ஒன்றிய - கம்யூனிஸத் தலைமைப் பீடம்கூட மறுக்கவில்லை. ஆனால் ஆண்ட இனம் - வீரப் பெருமைகள் பல பெற்ற இனம் - ஏன்? உலக வரலாற்றுக்கே வழிகாட்டிய தமிழினம்; தனக்கென ஓர் உரிமைகேட்பதே

தவருகத் தென்படுகின்றது... தமிழ்ப் பொதுவுடைமைத் தோழர்களுக்கு !

இச்சரித்திரக் குறிப்புக்களைத் தொகுத்து எமது விடுதலை ஏடான சுதந்திரனுக்குக் கட்டுரையாக எழுத முயற்சித்துக் கொண்டிருந்தபோது சில நண்பர்கள் இதைப்புத்தகமாக வெளியிட வற்புறுத்திஞர்கள். அதன் காரணமாகவே எனது ஆருவது வெளியீடாக இதனை உங்கள்முன் சமர்ப்பிக்கத் துணிந்திருக்கின்றேன்.

இதற்கு முன்பும் தமிழினத்தின் விடுதலைப் பாதையில் நான் எழுதிய 'சிங்களமே சீறிப்பார்', 'இரத்தச்சுவடு', 'ஒழிக ஒற்றை ஆட்சி', 'இலங்கையில் இன முழக்கம்', 'தமிழினத்தின் விடுதலைக் குரல்' ஆகிய பல புத்தகங்களை வெளியிட்டிருக்கின்றேன். இதில் 'சிங்களமே சீறிப்பார்', 'இரத்தச் சுவடு' ஆகிய இரு புத்தகங்களையும் 1961-ம் ஆண்டு நான் தடுப்புக்காவலில் இருந்தபோதே எழுதிமுடித்து - விடுதலை யாணதும் வெளியிட்டேன். அதைத் தொடர்ந்து வெளியிட்ட எனது அத்தனை புத்தகங்களுக்கும் தமிழ்பேசும் மக்கள் தந்துவந்த அன்பும் ஆதரவும்தான் இப் புத்தகத்தையும் வெளியிடத் தூண்டியிருக்கின்றன. எனவே இப்புத்தகம் உங்கள் கரங்களிலே தவழ்வதற்கு எமது வெளியீட்டாளராக முன்வந்த எனது மதிப்புக்குரிய நண்பர் - தமிழ்த்தாயின் தவப்புதல்வன் அருள்சிலன் பெறுணைந்து அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு - இப்புத்தகம் நிறைவுபெற எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய நண்பர்களான ஏ. ஜலால்தீன், பி. எம். முஞஸ், எம். சகுதுல்லா ஆகியோர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இப்புத்தகத்தைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த அச்சகத்தார்களுக்கும் தமிழ்த் தாயின் பெயரால் எனது நன்றிகள் பல.

தமிழமுதம்
எருக்கலம்பிட்டி
7-9-1977

இங்ஙனம்,
அன்பு-
கே. எஸ். ஏ. கபூர்

## 1 லெனினிஸவாதிகளின் லீலைகள்

காதிலே குண்டலமிளிர, கையிலே வளையல சைய, காலிலே சிலம்பொலிக்க, கழுத்திலே மணி விளங்க எம் தமிழன்னை இந்த ஈழமண்ணைப் பொங்கும் பொலிவுடன் அரசோச்சிப் பவனிவந்த காலமது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், கடைசியாகப் பீரங்கிகள் பிடித்து நின்ற — பிரித்தாள்வதில் பெயர்பெற்ற ஆங்கிலேயர்களால்கூட எதிர்த்து நின்று போரிட்டு வெல்லமுடியாத மறத்தமிழ் மாமன்னர்களால் அன்று கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட தமிழ் ஈழப் பெரும் நாடு நல்லூரிலே ஒரு சங்கிலியன், வன்னியிலே ஒரு பண்டாரவன்னியன், கண்டியிலே ஒரு ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் முதலாகிய எம் மறத்தமிழ் மாமன்னர்களின் மணிமுடிகள் எமது அழகு தமிழுக்கு அணிசெய்து — அதைப் பேணிக்காத்து வளர்ந்தோங்கச் செய்வதில் பெருமை கண்டன.

கோலேந்திக் கொடும்பகை அழிக்க வாளேந்தி — தோள்தட்டித் தமிழைப் பழித்து வேலெடுத்து வந்த முடியரசுகளை — வீரம்கொண்ட மானம் ஒன்றே தனதுயிரெனக்கொண்டு — களம் பல ஆடிவந்த எம் வீரத் தமிழ் மாமன்னர்களெல்லாரும் அன்று வஞ்சகர்களால் காலநேரமறிந்து காட்டிக்கொடுக்கப்பட்டார்கள். அதனல் அவர்கள் சிறைப்பட்டார்கள். சிம்மாசனமிழந்தார்கள். அதன் முடிவே தமிழினத்தின் இன்றைய அடிமைநிலையாகும்.

அழகு தமிழின் எழில்மிகு அணியாரம். அதன் புகழ் சாற்றுவதே நம் பணியாம். பேசும் தமிழிலே ஒரு பொலிவும் பூரிப்பும். கற்ருேருக்கு அது ஒரு சொர்க்கம். வளர்ந்து வரும் தமிழ் ஈழத்தைப் பாது காக்க வேண்டிய பொற்பேழை. வீரத்தின் வித்து. இனத்தின் மணம் பரப்பும் பூமலர்க்கொத்து. இப் பெருமினத்தையும், வரலாற்றுக்கு முற்பட்ட அழகு தமிழையும் அன்று கண்டியை ஆண்ட மாமன்ன னைக் காட்டிக்கொடுத்தோன் வழிவந்த பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் இனவெறி பிடித்து அடிமை இருளில் அமுக்குகின்றது. அங்கே தமிழ்பெருமினம் தம்மைக் காத்துக்கொள்ளக் கடந்த இருபத்தெட் டாண்டுகளாக இனமுழக்கமிட்டு நிற்கின்றது. துரோகிகள் துயர் தந்து அழகு தமிழை அழிக்கத் துடிக்கின்றனர். தமிழ் காத்துவாழும் தமிழரசுத் தூயவர்கள், அதைத் தடுத்துத் தமிழ் காத்து—தனி நாடு காணப் போராடுகின்றனர். அதனுல் அன்று வாளேந்திப் போரிட்ட தமிழன் — இன்று அமரர் தந்தை செல்வா காட்டிய அறப்போர் வழியில் பிறப்புரிமை காணத் தன்னை ஈர்ந்து நிற்கின்ருன்.

அப்புனிதமான அறப்போர்க்களத்தில் கூட்டணி யின் மேலான பணியைக் கண்டு பொச்சரிப்புக் கொண்டிருக்கும் இலங்கைப் பொதுவுடைமைத் தோழர்கள், தங்கள் தாய்மைப் பாசத்தை மறந்து, உலகப் பெரும் மொழி உணர்வைத் துறந்து, தமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் வல்லரசான தமிழ ரசைப் பார்த்துக் குதர்க்கம் பேசிக்கொண்டிருப் பதே நாம் காணும் லெனினிஸக் கொள்கை எனப்

பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காலம் நேரம் புரியாது, இரவு பகல் தெரியாது — அணை உடைத்துப் பெருகிவரும் பௌத்த சிங்களக் காட்டாற்றின் இனவெறியை அறியாது, போராட்டத்தின் சக்தியையும் தேவையையும் பகுத்துணரச் சிந்தனையில்லாது காலத்திற்கொவ்வாத பல கருத்துக்களைக் கோஷமாக எழுப்பித் திரிகின்றனர் எம் தோழர்கள்.

சிங்கள — தமிழ் மக்களிடையே இன்று நடக்கும் மொழிப் போராட்டம் — உரிமைப் போராட்டம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் புழுக்கத்தால் ஏற்பட்டவையாகும். எனவே சோஷலிஸ அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி சமநிலையை அடையும்போது மக்களின் உரிமைப் போராட்டம் தானாகவே மறைந்துவிடும் எனக் கோஷமிடும் தோழர்களுக்குச் சுண்ணும்புக்கும் தயிருக்குமுள்ள வேறுபாடு தெரியாதிருக்கின்றது. எனவே தோழர்களின் அரசியல் அறிவீனத்தைக் காணும் எங்களுக்கு அவர்கள்மீது அனுதாபம்தான் மேலோங்கி நிற்கின்றது — பாவம் — பரிதாபத்திற்குரியவர்கள்.

இந்த மட்டமான தத்துவத்தை எங்களைப் பார்த்து இப்புத்திசாலிகள் எடுத்துக்கூறுவதற்கு முன்பு — தோழர்கள் தாங்கள் கண்டதாகச் சொல்லிவரும் மேலான லெனினிஸ வழியை ஆய்ந்துணர்ந்து அறிந்துகொண்டார்களா என்று கேட்கின்றேன். 1917ம் ஆண்டு ஒக்டோபர் புரட்சியில் லெனின் மகத்தான வெற்றியைக் காண்பதற்கு

முன்னுள்ள — கடந்த பதினாறும் நூற்றாண்டு தொடக்கம் ரஷ்யாவை ஒரு ஏகாதிபத்திய பீட மாக்கிச் சாம்ராஜ்ய மண்டலமாக்க, காலத்திற்குக் காலம் மணிமுடிகொண்ட ஈவான்களும், மகா பீட்டர்களும், காதரைன்களும், அலெக்சாண்டர்களும், கடைசியாக ஜார் நிக்கலோஸ்களும் எப்படி எப் படியெல்லாம் காட்டுமிராண்டித்தனமான கொள் கைகளைக் கடைப்பிடித்துச் சிறுபான்மை இனங்க ளின் பிறப்புரிமைகளைக் கபளீகரம் செய்து வந்தார் கள் என்பதை ரஷ்ய வரலாறு இரத்தக்கறையுடன் எமக்கு வரிக்குவரி எடுத்துக்காட்டி நிற்கின்றது. லித்துவேனியர்கள், ஆர்மீனியர்கள், லத்துவியர்கள், டர்க்மென்கள், எஸ்தோனியர்கள், மால்தேவியர் கள், கிர்கிசியர்கள், தாத்சிக்கியர்கள், கசக்கியர்கள் முதலிய அறுபதுக்கும் மேற்பட்ட தேசிய இனங் கள் கதம்பமாக வாழ்ந்து வந்ததே அப்போதைய ரஷ்யாவாக அமைந்திருந்தது.

அப்போது அங்கே ரஷ்ய மணிமுடி தாங்கிய மன்னர்களால் ஈனவிரக்கமின்றி அடக்கப்பட்டு வந்த மிகச் சிறுபான்மைத் தேசிய இனங்களெல் லாம் ஒன்றுகூடி 1697ம் ஆண்டு மகா பீட்டர் மன் னனுக்கெதிராக ஒரு உரிமைப் போராட்டத்தைத் தொடக்கியிருக்கின்றன. அன்று மார்க்ஸின் பொரு ளாதாரத் தத்துவமோ — புரட்சித் தந்தை லெனி னின் பாட்டன் பூட்டன்களோ வருங்கால ரஷ்ய அரசியலமைப்பைப்பற்றிக் கனவுகள் காண்பதற்கு முன்பு — ஏன் — காலத்தின் அடிச் சுவடுகளைக்கூட அவர்கள் காண்பதற்கு முன்பே அன்று பதினேழாம்

நூற்றுண்டில் தொடக்கி வைக்கப்பட்ட புரட்சித் தீ அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அடக்குமுறை மன்னர்களுக்கெதிராகப் பற்றிப் பிடித்தே வந்திருக்கின்றது. எனவே 280 ஆண்டுகளுக்கு முன்பே ரஷ்ய மக்கள் அடிமை வியாபாரத்தையும், மக்களை அடிமைப்படுத்தும் நிலைகளையும் எதிர்த்துப் புரட்சிப் பாதையில் தம்மை ஈர்ந்து போராடத் தொடங்கியிருக்கின்றூர்களே — அது எந்தப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் கோட்பாடுகளுக்காக என்று சொல்ல முடியுமா?

அதேபோன்று லெனின் தலைமைதாங்கிய ரஷ்யப் புரட்சியையே எடுத்துக்கொள்வோம். உங்கள் சித்தாந்தப்படி பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சமநிலையை அடையும்போது ஒரு இனத்தின் பிறப்புரிமைப் போராட்டம் தானுகவே ஓய்ந்துவிடும் என்று மதிப்புக்குரிய லெனின் அன்று எண்ணியிருந்தால், அவர் அங்கு வாழும் அத்தனை தேசிய இனங்களுக்கும் எந்தப் பேதங்களுமில்லாது இன அந்தஸ்து, மொழி உரிமை, பிரிந்து செல்லும் பெரும் வாய்ப்புப் போன்ற பல்வேறு உரிமைகளையும் சட்டப்படி வழங்கியிருக்க முடியுமா? சகல செல்வாக்குகளையும் தன் சுண்டுவிரல் அசைவிலேயே வைத்திருந்த லெனின் சகல தேசிய இனங்களையும் பார்த்து இச்சித்தாந்தத்தைச் சொல்லி ஒரு மொழி சாம்ராஜ்யத்தை அவர் உருவாக்கியிருக்க முடியுமல்லவா?

1905ம் ஆண்டு நடைபெற்ற புரட்சியில் ஜார் மன்னனைப் பணிய வைத்த லெனின், சிறுபான்

மைத் தேசிய இனங்களுக்கான பாதுகாப்பு உரிமைகளைத்தான் முதலில் பெற்றிருக்கின்றார். தனிநபர் பாதுகாப்பு, பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கூட்டங்கள் கூடும் சுதந்திரம், மதச் சுதந்திரம், போன்ற பல உரிமைகளை 1905ம் ஆண்டு ஒக்டோபர் 17ம் தேதி ஜார் மன்னன் வெளியிட்ட பிரகடனத்தில் இம்மாதிரியான உரிமைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. எனவே சிறுபான்மை மக்களின் அடக்கப்பட்ட உரிமைகளுக்காக லெனின் ஜார் மன்னனைப் பணிய வைத்து வெற்றி கண்டிருக்கும்போது, தோழர்களே நீங்கள் அடக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழ்பேசும் மக்களுக்காக எப்போது அரசைப் பணியவைக்கத் துணிந்திருக்கின்றீர்கள்?

ஆகவே பொருளாதார சமநிலை மட்டுமே சோஷலிஸமென்றால் — மார்க்ஸின் பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உலகத் தோழர்களுக்கு வழிகாட்டிய லெனின் ரஷ்ய மக்களின் அரசியல் சம உரிமைகளையே சோஷலிஸமென்று வெற்றியோடு செயல்படுத்தி இருப்பதை நீங்கள் ஏன் உணர்ந்துகொள்ள மறுக்கின்றீர்கள்? அதனால்தான் அன்று லெனின், ஆட்சியையும் அதிகாரங்களையும் மக்கள் தலைகளைக்கொண்டு கணக்கிடாது அதிகாரங்களைச் சமத்துவமாகப் பங்கிட்டுக் கொள்வதுதான் உண்மையான — பூரணத்துவமான சோஷலிஸம் என்று கூறிச் சென்றார்.

உரிமைத் தாகம் கொண்டு, இனப் பெருமை யையும், மொழியின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து — இழந்த வாழ்வைப் பெறுவதற்காக எதையும் இழக்கத் துணிந்து தமிழினம் குருதி கொட்டிப் போராடிக்கொண்டிருக்கும் இந்நிலையில் சோஷலிஸப் போர்வையில் கம்யூனிஸம் என்ற கொடிய விசப்பாம்பு உணர்ச்சியற்ற சிலரை வளைத்துப் பிடித்து வைத்திருக்கின்றது. அன்று தொட்டு இன்று வரை தினமும் பொருளாதார மென்றே கோஷமிட்டு வரும் தோழர்கள் இதுவரை இலங்கைக்கேற்ற எந்த ஒரு பொருளாதாரத் திட்டத்தையாவது வகுத்து வெளியிட்டது கிடையாது. இனிமேலாவது அதை வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையும் தமிழினத்திற்குக் கிடையாதே. ஒரே மொழி. ஒரே இனம். ஒரே மதம். என்ற கோஷங் களை மட்டும் வகுப்புவாதத்தனமாக ஏற்றுக் கொண்ட பெரும்பான்மை சிங்கள மக்களை உள்ள டக்கிய இலங்கைப் பொதுவுடைமைக் கட்சி அவர் களின் விருப்பத்திற்கு மாறாக எதையும் தேசியப் பிரச்சினையில் செய்யமுடியாததினால்தான் தோழர் கள் அங்கொன்று இங்கொன்றாகச் சாயம் பூசிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனவே இனிமேலாவது உண்மை வழியைத் தெரிந்து திருந்திக்கொள்வீர்களா?

## 2. அரசியல் வியபிசாரிகள்

எமது அனுதாபத்திற்குரிய அரசியல் கோமாளிகளான தோழர்கள், எங்களைப் பார்த்துச் சொல்கின்ற ஒரு அடைமொழி பிற்போக்குவாதிகள் என்பதாகும். ஆனால் தங்களுடைய முற்போக்கால் இத்தோழர்கள் இதுவரை எதைச் சாதித்திருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக எதுவுமே கிடையாது என்பதை நாடே ஒப்புக்கொண்டிருக்கின்றது. எனவே தாங்கள் கண்டெடுத்த முற்போக்குக் கொள்கையால், தமிழ்ப் பெரும் தேசிய இனத்துக்குள் ஒரு பகுதி மக்களைப் பிரித்து, காலம் கடந்த நிலையிலும் ''சிறுபான்மை சமூகம்'' எனப் பெயர் சூட்டி வைத்துக்கொண்டிருப்பதுதான் தோழர்கள் தேடிப்பிடித்த முற்போக்காகும். இச்சமூகத்தை இவர்கள் உருவாக்கிக்கொண்டதன்மூலம் மற்றைய தமிழ் மக்களோடு இணைந்து பிணைந்து சமத்துவமாக வாழ அவர்களை விடாது ஒரு வட்டத்திற்குள் முடக்கிவைத்து அரசியற் பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பதுதான் தோழர்களின் முற்போக்குத் தத்துவமாகும். காலத்தின் வேகத்தாலும், தமிழரசின் தீவிரத்தாலும் வேகமாக அருகிக்கொண்டிருக்கும் இப்பிரச்சனையைக் காலநேரமறிந்து கோஷமிட்டுக் கிளப்பிக்கொண்டிருப்பதுதான் தோழர் கண்ட முற்போக்குத் தத்துவமாகும். இல்லை. இத்தோழர்கள் கண்டெடுத்த உலகப்பெரும் சித்தாந்தமாகும்.

தொழிலாளர் புரட்சி என்ற போர்வையில் அதிகாரங்களைச் சர்வாதிகாரமாகத் தன்வசப்படுத்திக் கொள்வதற்காக நடந்த போட்டியில், தன் தோழர்களான டிராஸ்கி, காமனேவ், றிஞேவிவ் முதலிய பல புரட்சித் தலைவர்களை நாடு கடத்தியும் படுகொலை செய்தும் தன் அதிகாரங்களை இறுக்கிக்கொள்ள ''ஸ்டாலின்'' ஈனவிரக்கமின்றிக் கையாண்டு வந்த பயங்கரத் திட்டங்களெல்லாம் முற்போக்குக் கொள்கைகள்தாஞ?

ஒரு நாட்டில் ஐந்து கட்சிகள் இருந்தால், அவைகளில் மூன்று கட்சியுடன் சேர்ந்து ஐந்தாவது கட்சியை அழிக்க வெண்டும். பின் இரண்டு கட்சிகளுடன் இணைந்து நான்காவது கட்சியை அடக்க வேண்டும். கடைசியாக இரண்டில் ஒன்றுடன் சேர்ந்து மூன்ருவது கட்சியை ஒடுக்க வேண்டும். கடைசியில் ஒன்றே ஒன்று மிஞ்சுமாகையால் அதை இலகுவில் நசுக்கிவிடுவதில் கஷ்டமிருக்காது என்ற லெனினின் தத்துவத்தை அப்படியே செயல்படுத்திக் காட்டினூர் தோழர் ஸ்டாலின். இம்முற்போக்குத் தத்துவக் கொள்கையின் பெயரால்தானே ஸ்டாலின் அன்று தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் — மாற்றுக் கருத்துச் சொன்னவர்களையெல்லாம் பழி பாவத்திற்கஞ்சாது தூக்குக் கயிற்றிலே ஊஞ்சலாட வைத்தார்.

ஏன்? இதே முற்போக்குக் கொள்கை வழிதானே இன்று இலங்கையிலும் இடதுசாரிக் கூடாரத்திற்குள்ளும் ஆதிக்கவெறி நடந்து கொண்டிருக்கின்றது. அன்று டிராஸ்கி மெக்ஸிகோவில் ஸ்டா

லினின் கையாட்களால் படுகொலை செய்யப்பட்டதுபோன்று, இடதுசாரிக் கூட்டாட்சிக்குள்ளும் பல அரசியல் குத்துவெட்டுகளும், டிராஸ்கியவாதிகளுக்குக் கழுத்தறுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இது எந்த முற்போக்கைச் சேர்ந்தது?

கோஷ்டிப் பூசல்களிலே வல்லவர்களான இத்தோழர்களின் மத்தியிலே மாஸ்கோ பிரிவு, சீனப் பிரிவு — கௌமன் கோஷ்டி, விக்ரம கோஷ்டி என்ற பல பிரிவுகள் இருக்கின்றனவே இவற்றில் எது முற்போக்குக் கொள்கை உடையது என்று சொல்வீர்களா?

எனவே சமுதாயத்தில் மக்கள் சில சமயங்களில் ஏமாளிகளைத்தான் பார்த்திருப்பார்கள். ஆனால் அரசியல் கோமாளிகளைப் பார்க்க வேண்டுமானால் நிச்சயமாக மக்களால் பொதுவுடைமைக் கூடாரத்திற்குள் அவர்களைப் பார்க்க முடியும். பொதுவுடமைத் தத்துவத்தில் ஓரிரு வரிகளை மட்டும் விழுங்கி ஜீரணித்துவிட்டுத் தோழர்கள் தினமும் பொய்களையே உமிழ்ந்துகொண்டிருப்பதில் கைதேர்ந்த கலையைப் பெற்றிருக்கின்றார்கள்.

எந்த வேலையுமே இல்லாத வாழாவெட்டிப் பெண்ணுக்கு எப்போதுமே எதிர்வீட்டு வாசலைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதிலே ஒரு சுய திருப்தி. பூவைத் தலையிலும், புருஷனைத் தன் உள்ளத்தின் ஆழத்திலுமாக வைத்துப் பூஜித்துக் குடும்பம் நடத்திடும் குலமகளாம் பத்தினியின்

ஒவ்வொரு அசைவிற்கும் வலிந்து களங்கம் கற்பிப் பதில் எமது தோழர்களுக்கு ஒரு தாகசாந்தி. மேடையிலே விளைமாது கற்பின் சிறப்பிற்குச் சிரம் தாழ்த்திய நிலையாகத் தோழர்கள் தம்மை மக்களுக்குக் காட்டிக்கொள்ள விழைந்து நிற்கின்றார்கள். தம்மைப் போன்று அரசியல் வியபிசாரத்திற்கைதேர்ந்த கலையைப் பெற்றுக்கொள்ளாது, வாய்மையிலும் – வன்மையிலும் புனிதத்துவம்கொண்டு சிறந்த கொள்கை வழி நடந்துவரும் எங்களைப் பார்ப்பதால் தோழர்களுக்கு ஏற்படும் எரிச்சலும் புகைச்சலும் அவர்களை மனித நிலையிழக்கச்செய்து அரசியல் நெறியிழந்து வெறிகொள்ளத் தூண்டியிருக்கின்றன.

அதனால் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கும் ஊரலைத் தணித்துக் கொள்ளத் தமிழினத்தின் ஏகோபித்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலே வருங்கால ஈழத் தமிழகத்திற்குள் வந்துபோய்க்கொண்டிருக்கும் தனிச்சிங்கள ஏகாதிபத்திய அமைச்சர்களுக்கும், தோழர்களின் தலைமைப்பீட சிங்கள எஜமானர்களுக்கும் தலையைச் சொறிந்துகாட்டிப் பாதம் வணங்கித் தங்கள்மீது அடிமை முத்திரையைக் குத்திக் கொள்வதில் ஆனந்தமடைகின்றார்கள். அங்கே தமிழ்ப் பெரும் தேசிய இனத்தின் விடுதலை உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் மனித தர்மத்திற்கு மாறாக மலிவான தெருப்பொருளாக்கித் தம் வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெருக்கிக் கொள்வதிலே பெருமை காண்கின்றார்கள்.

பொது வாழ்வில் தர்மம் அதர்மங்களைப் பகுத்தறியத் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் நெறி முறைகள் காப்பாற்றப்பட வேண்டும். அடக்குமுறைகளுக்கெதிராக ஆர்த்தெழ வேண்டும், என்பவைகளில் எப்போதாவது தங்களுக்கு ஆர்வமிருந்தது என்று தோழர்களால் தம் நெஞ்சைத் தொட்டுக் கூறமுடியுமா? இந் நாட்டு அரசியல் பொது வாழ்வில் எதை வேண்டுமானாலும் – எப்படி வேண்டுமானாலும் பேசலாம்; செய்யலாம், என்பதுதானே தோழர்களின் கடந்தகால அரசியற் பாதைகள்? எனவேதான் சொல்கின்றேன். மலம் கொட்டிய மேட்டில் தமிழினம் மனைகட்ட நினைக்காது – மாடு புரண்ட மடுவில் மக்கள் நீந்திக் குளிக்க மாட்டார்களென்று. அதனால்தான் எமது தோழர்களின் ஈனத்தனமான அரசியல் வழியில் தமிழினம் இணைந்து வர ஓராண்டு ஈராண்டுக்கு முன்பல்ல கடந்த நாற்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே மறுத்து வருவதைத் தோழர்களால் இன்னுமா புரிந்து கொள்ள முடியாதிருக்கின்றது? இடதுசாரிக் கொள்கைகள் எக்காலத்திலும் தமிழினத்தின் மத்தியிலே அவர்களது மேலான சிந்தனையில் புரையோடி ஜீரணிக்க முடியாது என்பதைத் தோழர்களால் உணர்ந்து திருந்திக்கொள்ள இன்னும் காலம் தேவையா?

மனித இனத்திற்கு இயற்கை அன்னை கொடுத்திருக்கும் ஒளிவிளக்குத்தான் மனச்சாட்சி. அரசியலில் மக்கள் தொண்டர்களாக – அடக்கப்பட்ட இனங்களின் நிரந்தர விடுதலைக் காப்பாளர்களா

கத் தமிழினத்தை நேரிய வழி நடத்திச் செல்லும் தமிழரசுத் தியாகிகள் எந்நிலையிலும் தம் ஒளி விளக்கை அணையவிடாது பாதுகாத்து - இறுக்க மான நெருக்கடிகளிலும் அரசியலை நெறிப்படுத்து வதில் பெருமையோடு நிறைவுகாண்கின்றார்கள். ஆனால் எம் தோழர்கள் மனச்சாட்சி என்ற அவ் வொளி விளக்கைப் "போலிப் பொதுவுடைமை" என்ற பெருமூச்சால் ஊதி அணைத்துவிட்டுத் தாங் கள் கண்ட அரசியல் சாக்கடையிலே காலநிலை புரியாமல் நீந்துவதன் மூலம் அதன் சக்தியைச் சோஷலிஸம் எனப் பூசிக்கொண்டு - புனிதமான சோஷலிஸத்தை மாசுபடுத்தி மூக்குப்பிடிக்க முடி யாத நாற்றத்துடன் மக்கள் மத்தியிலே பவனி வந்துகொண்டிருக்கின்றார்கள். இப்படித்தங்களது நிலைகளை அவர்களுக்கு அப்பட்டமாகப் புட்டுக்காட்டி உண்மை நிலைகளை விளக்கிக் காட்டினாலும் அதை உணர்ந்துகொள்ளச் சக்தியில்லாது வேண்டு மென்றே அடுத்தவர்கள்மீது அபாண்டமாக வசை பாடி வருகின்றார்கள். ஏன்? சில சமயங்களில் எங் கையோ ஒரு ஆஸ்பத்திரியிலுள்ளவர்களைப்போன்று ஊளையிட்டு உளறிக்கொண்டிருக்கின்றார்கள்.

கூட்டணிமீது இப்படி இவர்கள் காரணமில் லாது வசைபாடும் அழகு தமிழில் — தமிழுக்கே உரித்தான வார்த்தைகளைத்தான் அங்கே காண முடியுமே தவிர, அதிலே கருத்தாழமுள்ள விவா தத்தைக் காணமுடியாது. எம்மீது தோழர்கள் கொண்டிருக்கும் பொச்சரிப்புத்தான் தேவைக்கதிக மாக அங்கே இழையோடியிருக்கும். உண்மையிருக்

காது. மனித தர்மமிருக்காது. எனவே மனிதாபி மானங்களைத் தம் சுயநலத்திற்காகக் கொன்றொழித்து வரும் வெறும் பிண்டங்களான தோழர்கள், உதய சூரியனை மறைக்க உள்ளங்கை போதுமென்ற நம்பிக்கையில் விடுதலை வேண்டி சவக்குழிகள் பல படைத்துவரும் தமிழினத்தைப் பார்த்து விடுதலைக்குத் தமிழன் விதிவிலக்கானவன் என்று கோஷமிடுகின்றனர்.

எனவேதான் எமது தோழர்களுக்குச் சொல்கின்றேன். வெறும் அரசியல் அரிப்பால் மட்டும் உணர்ச்சிவசப்படாமல், அறிவால் உந்தப்படும் உணர்ச்சிகளுக்கேற்ப அரசியல் மதியூகத்துடன் வளைந்துகொடுத்து அதன் கௌரவத்தையும் – உங்கள் தத்துவத்தையும் நிரந்தரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்களென்று. கம்யூனிஸத்தின் கைக்குழந்தையான சோஷலிஸத்திற்கு இங்கே வேகமாகப் பாலூட்டி வளர்க்கத் துடிக்கும் தோழர்கள், அக்குழந்தையின் கழுத்தை நெரித்துப் பிடித்துக் கொண்டு பாலூட்டத் துடிக்கின்றார்கள். அதனால் அக்குழந்தை வளராது. மாறாக அங்கே இறப்புத் தான் கிடைக்கும். அதைப் போன்றே தமிழினத்தின் உரிமைகளையும், உணர்வுகளையும் ஈவிரக்கமின்றி நசுக்கிப் பிடித்துக்கொண்டு நீங்கள் பேசும் சித்தாந்தத்தால் எந்தப் பலனையும் எப்போதும் உங்களால் பெறமுடியாது.

எடுத்தவைகளுக்கெல்லாம் சேனமனிடமும், ரஷ்யத் தலைவர்களிடமும் கொள்கை விளக்கங்கள் கேட்டு ஓடி அலையும் நீங்கள், எப்போதும் பொரு

ளாதாரமென்றே கோஷமிடுகின்றீர்களே — அப்படி யென்றால் இதுவரை இலங்கை அபிவிருத்திக்கேற்ப எந்த ஒரு திட்டத்தையாவது நீங்கள் வெளியிட்டதுண்டா? அல்லது லெனின் காட்டிய பொதுவுடைமைச் சித்தாந்தப்படி, அடக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தின் நிரந்தர விடுதலைக்காவது நீங்கள் செய்த தியாகங்கள்தான் என்னவென்று ஒளிவு மறைவின்றிச் சொல்ல முடியுமா? ஏன் அடக்கு முறைச் சட்டங்களால் அடிமைப்படுத்தப்பட்ட எந்த இனமும் விடுதலைக்கு முன்பு பொருளாதாரமே முதல் முக்கியம் எனக்கொண்டு செயல்பட்டதாகத் தோழர்களால் எடுத்துக்காட்ட முடியுமா?

ரஷ்யப் பொதுவுடைமைத் தந்தை — தோழர்களின் மதிப்பிற்குரிய தெய்வம் — லெனின்கூட, தன் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி வெற்றி காணும் வரை, வருங்கால ரஷ்யாவின் பொருளாதார நிலைபற்றிக் கவலைப்பட்டது கிடையாதே! முதலில் அடக்கப்பட்ட தேசிய இனங்களெல்லாம் விடுதலை பெற வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் தானே தொடர்ந்து விடாப்பிடியாகப் புரட்சியை நடத்திக்கொண்டிருந்தார். உண்மை அதுவாக இருக்க, அவரின் சிஷ்ய கோடிகள் மட்டும் எந்த அடிப்படையில் எங்களைப் பார்த்து விடுதலைக்கு முன்பு பொருளாதாரமே முதல் தேவை என்று ஒரு வழிக் கொள்கை நடக்கும் இதய சுத்தி கொண்ட கூட்டணியைப் பார்த்துக் கேட்க முடியும்?

அப்படியென்றால் உலகில் இதுவரை விடுதலைப் போராட்டங்கள் நடத்திய நாடுகளும், இனங்களும் பொருளாதார வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொண்டு தான் இனவிடுதலைப் போராட்டங்கள் நடத்தியுள்ளன என்பதற்கு ஆதாரமாகத் தோழர்கள் புள்ளி விபரங்களை எடுத்துக்காட்டுவார்களா?

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை உள்ளடக்கிய நாடுகள் பலவற்றிலும் ஒற்றையாட்சி அரசியல் சட்டத்திற்கு மாறாக, அந்தந்தத் தேசிய இனங்களின் மகத்தான பிறப்புரிமைகளை அதிகாரத்திலிருப்போர் தாமாகவே வலிந்து விட்டுக்கொடுக்கும் வகையில்தான் உலக நாடுகள் பல செயல்படுகின்றன. பொதுவுடைமை நாடுகளானாலும் சரி, ஜனநாயக நாடுகளானாலும் சரி சமத்துவமான ஆட்சி முறைகளில் செயல்படுவதில்தான் வெற்றி கண்டுள்ளன.

அதே நேரத்தில், ஒரு நாட்டில் வாழும் பிற தேசிய இனங்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் மதித்தொழுக விடாப்பிடியாக மறுத்து வரும் சில அரசுகளும், இனங்களும் தினம் தினம் களங்கள் பல கண்டு முடிவில் அதிகாரத்திலுள்ளோர் தோல்விகளையே பரிசாகப் பெற்றிருக்கின்றனர். உதாரணமாக, எமது தோழர்களின் தலைமைப்பீடமான சோவியத் ஒன்றியத்தையே எடுத்துக்கொள்வோம். அன்றைய ரஷ்யாவைக் காலத்திற்குக் காலம் அரசோச்சி வந்த மன்னர்களெல்லாரும் — இன்றைய இலங்கை ஆட்சியாளர்களைப்போன்று

ஒரே மதம், ஒரே இனம், ஒரே மொழி என்ற மிரு கத்தனமான அடக்குமுறையில் அதை ஒரு சாம் ராஜ்ய மண்டலமாக்க இடைவிடாது தீவிரமாகச் செயல்பட்டு வந்ததின் பலன்தான் இன்று அது பொதுவுடைமைத் தலைமைப்பீட நாடாக மாறுவ தற்கு மூல காரணமாக அமைந்துள்ளது என்ப தைத் தோழர்களால் மறுக்க முடியுமா?

## 3 லெனின் அன்று ஒரு மார்க்ஸியவாதியல்ல

காரல்மார்க்ஸின் தத்துவங்கள் லெனினின் உள்ளத்தில் ஆழமாகப் புரையோடுவதற்கு முன், அவர் ஒரு இனவிடுதலைப் போராட்ட வீரராகத் தான் மக்களுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாரே தவிர, ஒரு மார்க்ஸியவாதியாக ஆரம் பத்தில் அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. அப் போது அவரால் அதை நினைத்துப்பார்க்கவும் முடியவில்லை.

1697ம் ஆண்டு ரஷ்ய அரசபீடத்திலிருந்த மன் னன் மகாபீட்டர் ஒரு பகுதி ரஷ்ய மக்களை மிரு கத்தனமாக அடக்கிவைத்து ஆட்டு மந்தைகளாக எண்ணி அரசோச்சிக்கொண்டிருந்த காலத்தில் மக் கள் அங்கே புரட்சிக் கொடியை உரிமைகோரி உயர்த்திக் காட்டினார்கள். ஆனால் ஆட்சியும் அதி காரமும் துப்பாக்கிகளைக் காட்டித் துரைத்தனம் நடத்தியதால் — அவற்றுக்கு ஈடு கொடுக்க முடி

யாத பல புரட்சிவாதிகள் சிறைப்பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர். அன்று மூட்டிவிடப்பட்ட தீ மெல்ல மெல்லப் புகைந்துகொண்டே வந்து 1825ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் நாள் மன்னன் நிகலோஸ் பட்டத்திற்கு வந்த அன்று மீண்டும் பற்றி எழும்பத் தொடங்கியது. ஆனால், மன்னன் நிகலோஸ் அப்புரட்சித் தீயை மூட்டிவிட்ட இரா ணுவ அதிகாரிகளை உடனுக்குடன் சிறைப்பிடித்துச் சித்திரவதை மூலம் அவர்களைக் கொன்றொழித் தான். அதனால் பற்றிப்பிடித்த அப்புரட்சித் தீ திரும்பவும் உள்ளூரப் புகைந்துகொண்டே பற்றி எழவேண்டிய காலத்தை எதிர்பார்த்திருந்தது.

இப்படிக் காலத்திற்குக் காலம் நடந்துவந்த புரட்சிகளைப் போன்று 1881ம் ஆண்டு நடைபெற்ற புரட்சியில் மன்னன் இரண்டாவது அலக்ஸாண்ட ரும் அவனது உயர்தர அரசாங்க அதிகாரிகளும் புரட்சிவாதிகளால் கொல்லப்பட்டாலும்கூட, அவர்களால் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்ள முடியாது போய்விட்டது. அதனால் அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மன்னன் பயங்கரவாதிகள் என்ற பெயரில் பல புரட்சிக் காரர்களை 1887ம் ஆண்டு சிறைப்பிடித்து கழுகு மரமேற்றினான். அவர்களுள் லெனினின் தமைய னான 21 வயதுடைய ''அலக்சாண்டர் உலியனாவ்'' என்பவரும் இதே ஆண்டு மே திங்களில் தூக்கி லிடப்பட்டார். அப்போது லெனினுக்கு வயது 17 எனவே அதுவரை காலமும் போராட்டங்க ளில் முன்னணி வகிக்காத மதிப்பிற்குரிய லெனின்,

அங்கே தனது தமையன் தூக்கிலிடப்பட்ட பின்பு தான் தீவிரப் புரட்சிவாதியாக மாறிப் போராட்டங்களில் பங்கு கொண்டார் என்றே ரஷ்ய விடுதலை வரலாற்றிலிருந்து நாம் பார்க்கின்றோம். புரட்சி பற்றி அடிக்கடி பல கட்டுரைகள் எழுதினார். துண்டுப் பிரசுரங்கள் பல வெளியிட்டார். இப்படியான அவரின் தீவிரத்தால் திடுக்கிட்ட மன்னன் ஜார், லெனினைச் சிறைப்பிடித்ததின் பலனாக 1897ம் ஆண்டு பெப்ரவரி 13ந் தேதி சைபீரியாவுக்கு மூன்று ஆண்டுகள் வரை நாடு கடத்தப்பட்டார். அப்போது அங்கு வைத்துத்தான் — சைபீரிய சிறை அமைதியில் அவர் மார்க்ஸின் தத்துவங்களையும், பொருளாதாரக் கோட்பாடுகளையும் துருவித்துருவிப் படித்தார். தீவிரமாக அதை ஆராய்ந்தார். மார்க்ஸின் வழியைக் கற்றறிந்தார். விடுதலை பெறத் துடித்து வரும் வருங்கால ரஷ்ய அரசியலமைப்பில் பல்வேறு தேசிய இனங்களின் விடுதலையும் வாழ்க்கைத் தரமும் எப்படி அமைய வேண்டுமென்று சிந்திக்கத் தொடங்கினார்.

ஆனால் இச்சிறைவாசத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன், 1893ம் ஆண்டளவில் லெனின் சமாராவில் குடிபெயர்ந்து வாழ்ந்த காலத்திலும், 1895ம் ஆண்டு பீட்டஸ் பார்க் சிறையில் பதினன்கு திங்கள் சிறைவைக்கப்பட்டிருந்த காலத்திலும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றவர்களின் தத்துவங்களை ஓரளவு அவர் தெரிந்துவைத்தாலும்கூட — அதில் அவர் பூரணமான ஈடுபாடு கொள்ளாதவராகவே இருந்தார். அன்று தன் புரட்சித் தோழர்களில்

சிலரின் மார்க்ஸியக் கேள்விகளுக்குத் தெளிவான விடை அளிக்கத் திணறியதிலிருந்தும், அப்போது அவர் தேசிய இனங்களின் அரசியல் உரிமைகள் பற்றி எழுதிய கட்டுரைகளிலிருந்துமே இந்த உண்மையை நாம் தெரிந்துகொள்கின்றோம். எனவே லெனின் சைபீரிய சிறை சென்றதன் பிறகே அவர் ஒரு தீவிர மார்க்ஸியவாதியாக மாறித் தன் புரட்சித் தோழர்களுக்கு அத்தத்துவங்களை விளக்கிக் காட்டிப் போராட்டத்தில் தொடர்ந்து வீறு பெற்றெழச் செய்தார்.

ஏன்? தினமும் போராட்டங்களுக்கான திட்டங்களைப் பற்றியே சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எம்மிடம் — விடுதலை பெறப் போகும் ரஷ்யாவுக்கான திட்டவட்டமான புதிய அரசியல் கொள்கைகள் எதுவுமில்லையே என ஸ்டாலின் போன்ற முன்னணிப் புரட்சிவாதிகளிற் பலர் லெனினை அடிக்கடி குடைந்து வந்திருக்கின்றனர். ஆகவே லெனினின் சைபீரிய சிறைவாசத்திற்கு முன்பு, லெனினோ அல்லது அவரின் புரட்சித் தோழர்களோ மார்க்ஸிய சித்தாந்தங்களை ஆழமாகக் கற்றுத் தேர்ந்திருக்கவே முடியாது என்பதை ஆங்காங்கே இப்படிப் பல குறிப்புக்களிலே இருந்து நாம் தெளிவாகத் தெரிந்துகொள்கின்றோம். மற்றெல்லாப் புரட்சி வீரர்களையும்விட லெனினிடம் அரசியல் மதியூகமும், சாணக்கியமும், பேச்சுக் கவர்ச்சியும் நிறைந்திருந்ததினால் அவர் மற்றவர்களின் உள்ளங்களில் ஆழமாக ஊடுருவியிருந்தார்.

சைபீரிய சிறைவாசத்திலே இருந்து விடுதலை பெற்ற லெனின், ஜெர்மனியிலே குடியேறினர். அப்போது அவரை எதிர்நோக்கியிருந்த பல தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும், பொருளாதாரக் கஷ்டங்களுக்கு மத்தியிலே 1900ம் ஆண்டு டிசம்பரில் ''இஸ்க்ரா'' என்ற பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். அதன் மூலம் ரஷ்யச் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகள் பற்றியும், மார்க்ஸின் தத்துவங்கள் பற்றியும், வருங்கால ரஷ்ய அரசியலமைப்பு எப்படி அமையவேண்டுமென்பது பற்றியும் உலகிற்கு எடுத்துக்காட்டினர். அப்போது டிராஸ்கி போன்ற பல தர்க்கவாதிகள், அறிஞர்கள் லெனினின் சில அரசியல் திட்டங்களைத் தீவிரமாக எதிர்ந்து வந்ததால் அங்கே புரட்சிவாதிகள் இரு கூறுகப் பிரிந்தே செயற்பட்டனர்.

லெனின் இப்புரட்சி இயக்கத்தைப் பற்றிச் சிந்திக்க முடியாதிருந்த காலத்தில் மேற்கு ஐரோப்பாவில் மார்க்ஸின் தத்துவம் வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் இத்தத்துவத்தை ரஷ்ய மக்களிடையேயும் அறிமுகப்படுத்தி ஓரளவு இதை வேரோடச் செய்த பெருமை ''பிளெகானவ்'' என்பவரையே சாரும். 1880ம் ஆண்டு இவர் மார்க்ஸின் தத்துவங்களை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து ரஷ்ய மக்களிடையே இரகசியமாகப் பரப்பிவிட்டிருந்தார். அப்போது லெனின் தனது பத்தாவது வயதைத்தான் தாண்டிக்கொண்டிருந்தார். பின் ஒரு காலத்தில் இதே பிளேகானவ் லெனினுடன் இணைந்து ''இஸ்க்ரா'' பத்திரிகைக்

குப் பல கட்டுரைகள் எழுதுவதிலும், அப்பத்திரிகை வளர்ச்சியில் தீவிரமாகப் பங்கெடுப்பதிலும் புரட்சியை வழிநடத்திச் செல்வதிலும் தீவிர பங்கெடுத்திருக்கின்ருர். ஆகவே லெனின் தன்னுடைய ஆரம்பகால அரசியல் வாழ்வில், ஒரு சக்தி படைத்த விடுதலை வீரனே தவிர – மார்க்ஸியவாதியல்ல என்பதைத்தான் எம் தோழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்போது "சமூக ஜனநாயகக் கட்சி" என்ற ஒரு இயக்கத்திற்குத் தலைமைதாங்கி நடத்திக் கொண்டிருந்த லெனின் சொன்ஞர்.

> ரஷ்யாவில் வாழும் பல்வேறு தேசிய இனங்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் யாவும் சட்டபூர்வமாக — சமத்துவமாகத் தரப்பட்டாலே தவிர, வேறு எந்த சக்தியாலும் திரண்டு நிற்கும் மக்கள் சக்திக்கு ஈடு கொடுத்து ரஷ்யாவின் பேரழிவைத் தடுக்க முடியாதென்று.

அன்று போலந்தை ரஷ்ய மயமாக்கும் திட்டம் மிகத் தீவிரமாகவே நடைபெற்று வந்தது. பாடசாலை, கல்லூரிகளிலெல்லாம் போலந்து மாணவர்களுக்கு ரஷ்ய மொழியிலேயே கல்வி புகட்டப்பட்டு வந்தது. இவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்கள் கிடையா. இவர்கள் விற்பனை செய்ய விரும்பும் தம் சொத்துக்களை ரஷ்யர்களுக்கு மட்டும்தான் விற்பனை செய்ய வேண்டுமென்ற சட்டமே இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டி

ருந்தது. அதே போன்று உக்ரைனிய மொழியும் எழுதுவதோ, அச்சிடப்படுவதோ நேரடியாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. அம்மொழியிலுள்ள பாட்டுக்கள், நாடகங்கள் யாவும் வலோத்கார மாகத் தடைசெய்யப்பட்டிருந்தன. இதேபோன்றே எஸ்தோனியா, லித்துவேனியா, லத்துவீயா, ஆர் மீனியா, டர்க்மெனியா, தாத்சீக்கியா முதலாய பல தேசிய இன மக்களுக்கும் கட்டாய மதம் புகுத் தப்பட்டு, மொழி உரிமைகள் பறிக்கப்பட்டு ரஷ்ய மயமாக்கிவிடப் பல தீவிர நடவடிக்கைகள் எடுக் கப்பட்டு வந்தன.

அங்கு வாழ்ந்த கத்தோலிக்க மக்களின் திரு மணங்கள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எதுவுமே சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படாது — சமூகத்தில் மாசு தேடிக்கொள்ளச் செய்தனர். இவை அன்றைய ரஷ்யாவின் முடிதாங்கிய மன் னர்களின் மிருகத்தனமான அடக்குமுறை நிர்வா கங்களை எடுத்துக்காட்டும் சில உதாரணங்களே யாகும். இப்படி ஈனத்தனமான அடக்குமுறைகள் அன்று எத்தனை ஆயிரமாயிரமோ உள. ஆகவே தான் இங்கே எம் தோழர்கள் சிந்திக்க வேண்டும். அடக்கப்பட்ட இத்தேசிய இனங்களின் அவல நிலை களைத் தன் ஆய்ந்துணரும் அறிவின் சக்தியால் பகுத்துணர்ந்துகொண்ட லெனின், அவர்களின் விடுதலைக்கே முக்கியத்துவம் கொடுத்துப் போரா டியிருப்பாரா? அல்லது பொருளாதாரத்திற்காகப் போராடியிருப்பாரா? தீ பிடித்தெரியும் வீட்டுக் குள் அகப்பட்ட குழந்தையைக் காப்பாற்ற நினைக்

காது சிப்பை மட்டும் காப்பாற்றத் துணிந்த கதை யாகத் தோழர்களின் பொருளாதாரத் தத்துவ மிருக்கின்றது.

தன்னின உணர்ச்சிகளுக்குத் தடை விதித்து நிற்கும் இங்குள்ள தோழர்களின் பொதுவுடைமை என்ற பித்தலாட்டத்தால் இவர்கள் இதுவரை எந்தப் பலனைப் பெற்றிருக்கின்றார்கள்? தம் முடைய உரிமைகளையும், உணர்வுகளையும் மனித சுதந்திரத்திற்கு மாறாகக் கொன்றொழித்துத் தம் தாய் மொழியின் தனிச் சிறப்பைக் குருட்டுத்தன மாகக் குறைத்து மதிப்பிட்டு ஆமையாக ஊமை யாக அடங்கி வாழ நீங்கள் எடுத்த முடிவை நினைக் கும்போது உங்களுக்கே வெட்கமாக இல்லையா? அன்று இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி அசுர வேகத்தில் தன் அரசியல் வாழ்வை ஆரம் பிக்கும்போது ஒரு பொதுவுடைமைவாதியாகத் தான் ஆரம்பித்தான். இத்தாலிய நாட்டின் பொது வுடைமைக் கொடியைத் தவிர, வேறு எந்தக் கொடிகளுமே பறக்கக் கூடாது என்று தன் உயி ரையே பணயம் வைத்து வீறுபெற்று நின்றான்.

அதே நேரத்தில் அவனது உள்ளத்தின் ஆழத் திலும் தேச பக்தி, இனப் பற்று, மொழி உணர்வு ஆகியவைகளும் ஒளியேற்றி நின்றன. இதனால் இத்தாலியின் பழம் பெருமைகளை எண்ணிப் பார்த்த அவன், அங்கே அடிபட்ட சிங்கம்போல் வீழ்ந்து கிடந்த தன் தந்தையர் நாட்டை உலகில் தலை நிமிர்ந்து பெருமைகொள்ளச் செய்வதே வாழ்வில் முழு லட்சியம் என்று மனதிற்குள்

பெரும் எண்ணத்தை ஏற்படுத்திக்கொண்டு புயல் வேகத்தில் தன் அரசியலை ஓட்டிச் சென்றான். அப்போது தன் தேசிய-இன உணர்ச்சிகளுக்குப் பொதுவுடைமை குறுக்கிட்டுத் தடையாக நிற்பதை உணர்ந்த முசோலினி, அதுவரை கடைப்பிடித்து வந்த தன் கொள்கைக்கு முடிவாகவே மூழுக்குப் போட்டான். அன்றைய அவனது தீவிரத்தால் இத்தாலியில் எழுந்து வளர்ந்துகொண்டிருந்த பொதுவுடைமைக் கட்சி அதனால் இடறி விழுந்தது. ஏன்? ஒரு காலத்தில் பொதுவுடைமைக் கட்சித் தலைமைப்பீடம் இத்தாலியிலேயே இருந்ததால் சீனா, ரஷ்யா போன்று இத்தாலியும் கடைசி வரை பொதுவுடைமை நாடாகவே மாறியிருக்க முடியும். ஆனால் முசோலினியின் தன்னின உணர்ச்சி கால நேரமறிந்து அவனைச் சரியான பாதையிலே திருப்பிவிட்ட சிறப்பை எம் தோழர்கள் தெரிந்துணர்ந்து கொள்வார்களா?

## 4 விடுதலைப் புரட்சியே
## பொதுவுடைமையின் வித்து

*1909*ம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரை நடைபெற்ற தோல்வியுற்ற புரட்சியில் லெனின் அவர்களால் ரஷ்ய அதிகாரப் பீடத்தைக் கைப்பற்றிக்கொள்ள முடியாவிட்டாலும் கூட, ஜார் மன்னனைப் பணியவைத்து அடக்கப்பட்ட

இனங்களுக்கான உரிமைகள் சிலவற்றைப் பெறுவதில் பெருமை கண்டிருக்கின்றார். 1905ம் ஆண்டு ஒக்டோபர் 17இல் ஜார் மன்னன் வெளியிட்ட பிரகடனத்தில், சிறுபான்மை மக்களுக்கு மதச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், தனிநபர் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் ஆகிய சில அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. இதைப்பற்றித்தான் தோழர்களிடம் லெனின் சொல்லும்போது, எமது போராட்டத்தில் மகிழ்ச்சிக்குரிய ஒரு வெற்றியை நாம் இப்போது பெற்றுவிட்டோம். என்றாலும் இச்சிறுபான்மைத் தேசிய இனங்களெல்லாம் தம்மைத் தாமே ஆளுகின்ற நிலை கிடைக்கும்போதுதான் போராட்டத்தில் எம்மால் பூரணமான வெற்றிபெற்றதாகக் கருத முடியும் என்று விளக்கிக் காட்டினார்.

எனவே, சோஷலிஸம் என்பது மேலிடத்து உத்தரவுகளால் உருவாக்கப்படுவதல்ல. மக்களின் கட்டுக்கோப்பான ஐக்கியத்தில் - சிறுபான்மை மக்களின் நம்பிக்கையில் உருவாக்கப்படும் தேச பக்தியிலிருந்தே அது உருப்பெறுகின்றது அதிகாரங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் சிறுபான்மை மக்களை மதித்தொழுகும் நிலையிலிருந்துதான் தேசபக்தி உருவாகி பின் சோஷலிஸமாக மலர்கின்றது என்றுதான் லெனின் தன் தோழர்களுக்கு சோஷலிஸத்தைப்பற்றி விளக்கிக் காட்டினார்.

1917ம் ஆண்டு ஒக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதும் — அதே ஒக்டோபர் 26ம் தேதி நடந்த

காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய லெனின், பூர்ஷ்வாக்களின் நாடு பிடிக்கும் கொள்கை — பிற இனங்களுடைய பூமியை அபகரிக்கும் மிருகத்தனமான எண்ணங்கள் தெய்வத்தாலும்கூட மன்னிக்க முடியாத குற்றங்கள் என்று காரசாரமாகக் கண்டித்திருக்கின்றார். ஆனால் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின்மூலம் அவர்களைக் கொன்றொழித்து வரும் பூர்ஷ்வாக்களை எம் தோழர்கள் எந்தக் கொள்கையில் ஆதரிக்கின்றார்கள் என்று கேட்கின்றேன்? அன்று லெனின் சொன்னது பிழையா? அல்லது இன்று நீங்கள் கடைப்பிடிக்கும் கொள்கை சரியா?

அன்று 1905ம் ஆண்டு நடந்த தோல்வியுற்ற புரட்சியில் ரஷ்ய விவசாயிகள் முற்றாகவே கலந்து கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல — லெனினின் புரட்சிப் படைக்கெதிராகவும் செயல்பட்டார்களென்றே நாம் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கின்றோம். புரட்சியாளர்களைத் தோற்கடிப்பதற்குப் போராடிய மன்னனின் படையில் ரஷ்ய விவசாயிகளே முக்கிய பங்கேற்றிருக்கின்றனர் என்ற உண்மையைத் தோழர்கள் மனதிற்கொள்ள வேண்டும். லெனினின் சிந்தனையும் புரட்சியும் முழுக்க முழுக்கப் பொருளாதாரத் திட்டங்களையே கொண்டிருந்ததென்றால் ஒரு நாட்டின் பொருளாதார முதுகெலும்பான விவசாயிகளைத் தன் புரட்

சிப் படையில் சேர்த்துக்கொள்ள லெனின் ஏன் தவறினர் என்று தோழர்கள் கூறுவார்களா?

அன்று அடக்கப்பட்ட தேசிய இனங்களின் தாக்கம் பெரும்பான்மை ரஷ்ய விவசாயிகளிடம் எதிரொலிக்கவில்லை என்பதனலேயே லெனினின் புரட்சிக் கோஷங்களால் அவர்கள் கவரப்படாது புரட்சிப் படையில் நின்றும் தம்மை விடுவித்துக் கொண்டு எதிரணியில் நின்று செயற்பட்டனர். பின்பு லெனின் கால நேரமறிந்து, உண்மையை உணர்ந்து மார்க்ஸின் கோஷங்களில் ஒன்முன "உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்ற தத்துவத்தை வெளியிட்டார். அதன் பின்பே விவசாயிகள் புரட்சிப் படையில் மெல்ல மெல்ல தம்மை இணைத்துப் பிணைத்துச் செயற்படத் தொடங்கினர். எனவே அவர்கள் முற்முகப் புரட்சியில் இணைந்து அதை வெற்றியடையச் செய்து, சோவியத் யூனியனை மலரச் செய்வதற்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் பிடித்திருக்கின்றன.

லெனினின் இத்தேசியப் புரட்சியின் வெற்றியிலேயே அடக்கப்பட்ட தேசிய இனங்களின் உரிமைக் குரலுக்குச் சிறப்பான இடம் என்றுமிருக்கின்றது என்பதை உணர்ந்து இறுக்கமான நம்பிக்கை கொண்ட தேசிய இனங்களெல்லாம் புரட்சிப் படையில் திரண்டு நின்றன. 1917ம் ஆண்டு பெப்ரவரிப் புரட்சி தோல்விகண்டு ஒக்டோபர் புரட்சி வெற்றியைத் தேடித் தருவதற்கிடையிலுள்ள ஒன்பது மாத இடைவெளிக்குள்ளேயே அடக்கப்பட்டு வந்த தேசிய இனங்களெல்லாம் தம்

விடுதலை வேட்கையை வெளியிடத் தொடங்கி விட்டன.

உக்ரைனியர்கள் கீவ் நகரில் ஏப்ரல் திங்களில் கூடித் தங்களுக்குத் தனியாட்சி வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டதைப் போன்று — எஸ்தோனியர்கள் ரேவல் நகரில் ஜூலை திங்களில் ஒரு தற்காலிக அரசையே அமைத்துக்கொண்டனர். அதைத் தொடர்ந்து லத்துவியர்களும் ஆகஸ்டில் ரீகா நகரில், சுதந்திரப் பிரகடனம் செய்துகொண்டனர். இப்படிப் பல்வேறு தேசிய இனங்களின் எழுச்சிகளுக்கு மத்தியில்தான் லெனினின் ஒக்டோபர் புரட்சி மகத்தான வெற்றியைப் பெற்று உலக வரலாற்றைப் படைத்துவிட்டது. ஆகவே தேசிய இன எழுச்சிதான் பொதுவுடைமையின் வித்து என்ற உண்மையைச் சொன்னால் பிதற்றிப் புலம்பும் தோழர்களுக்கு வேப்பங்காயாக இருக்குமோ?

பொருளாதாரத்தை முன் வைத்தே லெனின் இப்புரட்சியை நடத்தியிருந்தால், அப்பயங்கரப் போராட்டங்களுக்கும் – பன்னூறு சவக்குழிகளுக்கும் மத்தியிலே இப்படிப் பல தேசிய இனங்களெல்லாம் லெனின் முன்னிலையிலேயே சுதந்திரப் பிரகடனம் செய்திருக்க முடியுமா? அல்லது லெனின்தான் அதற்கு இடம் கொடுத்திருப்பாரா? ஒருவேளை பொருளாதார விடுதலைக்குத் தனியாட்சிப் பிரகடனம் அவசியம்தான் என்று தோழர்கள் கூறுவார்களேயானல் ளி தமிழினத்தின் பொருளாதார விடுதலைக்காக — கட்டுப்பாடுகளில்லாத

ஒரு இன உரிமைகளுக்காக நாம் ஏன் ஈழத் தமிழகத்தை அமைக்கக் கூடாது எனக் கேட்கின்றேன்?

இன்றைய உலகில் பொதுவுடைமைத் தத்துவத்தில் இயங்கும் நாடுகளெல்லாம் தம் தேசிய எழுச்சியைச் சிறந்த முறையில் பயன்படுத்தியே பொதுவுடைமை ஆட்சியை நிறுவிக்கொண்டன என்பதே உலக வரலாறு எமக்குக் காட்டும் பாடமாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடைமை நாடுகளாக மாறியதற்கு ஹிட்லரையும் அவனது நாஜிப் படைகளையும் எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களே மூல காரணமாக அமைந்தன. சீனு சிவப்பாவதற்கு ஜப்பானியர்களை எதிர்த்து நடைபெற்ற புரட்சிகள்தான் காரணமாக இருந்தன.

மேற்கு பாகிஸ்தானின் அடக்குமுறைகளை எதிர்த்து கிழக்கு பாகிஸ்தானிய வங்காளிகள் இன முழக்கமிட்டதே பங்களாதேஸாகப் பிரிந்தது. இன்று அவர்கள் பொதுவுடைமைக் கூடாரத்திற்குள் போய்க்கொண்டிருக்கின்றனர். அமெரிக்க அரசியல் போக்கை எதிர்த்துக் கியூபாவின் தேசிய எழுச்சி உரிமைக் குரல் கொடுத்ததே அது பொதுவுடைமை நாடாக மாறுவதற்குக் காரணமாக அமைந்தது.

இஸ்ரவேலின் மிருகத்தனத்தால் பாலஸ்தீனத்தில் அகதிகளாக்கப்பட்ட ஆறு லட்சம் அராபியர்களும் – அவர்களைச் சார்ந்த நாடுகளும் பொதுவுடைமைக் கோட்டைக்குள் வேகமாகப் போய்க்

கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே கம்யூனிஸக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டும் தோழர்களின் தத்துவ முரண்பாடுகளாலேயே தமிழினம் அதை முற்றாக ஒதுக்கிவிட்டிருக்கின்றது. உலகில் மற்றெல்லா நாடுகளிலும் அடக்கப்பட்ட தேசிய இனங்களை வாரி அணைத்து ஆறுதல் கூறி அவர்களின் விடுதலைக்கான வழிகளைக் கம்யூனிசம் காட்டியிருக்கும்போது இங்கு எம் தோழர்களின் நிலையோ அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

> "நாடோ, இனமோ எதுவானாலும் அது நடத்தும் விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாக நாம் ஈடுபட்டு, அவர்களுக்கான விடுதலை வாய்ப்பை நாமும் தேடிக்கொடுப்பதன் மூலம் அவர்கள் மத்தியிலே எம் தத்துவத்தை வெற்றியடையச் செய்யலாம்."

என்பதே லெனினின் சித்தாந்தங்களில் ஒன்று என்பதை எமது தோழர்கள் உணருவார்களா?

1917ம் ஆண்டுப் புரட்சி வெற்றி தேடித் தந்ததும் அதன் தோல்வி கண்ட ரஷ்ய சாம்ராஜ்யத்திலிருந்து போலந்து, பின்லாந்து போன்ற பல நாடுகளுக்கு லெனின் தன்னாட்சி உரிமை வழங்கியதோடு, ரஷ்யாவோடு இணைந்து வாழ விரும்பிய பல்வேறு தேசிய இனங்களுக்கும் சமத்துவமான அரசியல் உரிமைகளைச் சட்டப்படி வழங்கிச் சென்றார். விடுதலை பெற்ற சோவியத் ஒன்றியத்தில் ரஷ்ய மொழி பேசுகின்ற பதினான்கு கோடி மக்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றதோ, அதே

உரிமைகளனைத்தும் அங்கு வாழும் மிகச்சிறு தேசிய இனங்கள் அனைத்துக்கும் இருக்கின்றன. அன்று லெனின் புரட்சியில் வெற்றிபெற்றபோது அங்கு வாழ்ந்த 6000 மக்களைக்கொண்ட 'நைட்னி' என்ற தேசிய இனத்திற்கும் மொழி உரிமை, தன்னுட்சி உரிமைகள் யாவும் வழங்கியிருக்கின்றார். பதினைன்கு கோடி மக்களின் ரஷ்ய மொழி எங்கே? ஆறுயிரம் மக்களின் நைட்னிய மொழி எங்கே? இருந்தும், அரசியல் நெறி என்பது இதுதான் என்று லெனின் தன் கூடாரத்திற்குள்ளே உள்ளவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். அதனால் அரசியலை நெறிப்படுத்திப் பெருமை கண்டிருக்கின்றார்.

ஆனால், அதே லெனினிஸவாதிகள் நாங்கள் தான் என்று தினமும் கோஷமிட்டுக்கொண்டிருக்கும் எம் தோழர்கள், இங்கு 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் உரிமை கேட்பதை மானமிழந்து கேலிபண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

அங்கு அரசாங்க மதம் என்று ஒரு மதம் கிடையாது. எல்லா மதங்களுக்கும் சட்டப்படி சரியான பாதுகாப்புக்கள் தந்திருப்பது போன்று, எந்த நேரத்திலும், எந்த இனம் வேண்டுமானாலும் பிரிந்து சென்று தனி அரசு அமைக்கவும் ரஷ்ய அரசியல் சாசனத்தில் தெளிவான உரிமைகளிருக்கின்றன. அங்குள்ள சில சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு உயர்ந்த வரலாற்றுப் பெருமைகளோ, தனிநாடாக வீறுற்று வாழ்ந்த சிறப்புக்களோ, மொழி வளமோ, இலக்கிய வளமோ

ஏதும் கிஞ்சித்தும் கிடையாது. ஏன்? சோவியத் அரசியலமைப்பிற்குப் பின்புதான் சில தேசிய இனங்களின் மொழிகளுக்கே எழுத்து வடிவங்கள் உருவாகின.

ஆனால் வாழ்ந்த இனம், தனக்கென ஒரு வரலாறு படைத்த இனம், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கண இலக்கியம் கண்ட இனம், தனித்து நின்று ஈழத்தில் அரசோச்சிய இனமான தமிழினம், தான் வாழ, தமிழ் வாழ ஒரு தமிழீழம் கேட்பது ஏன் தவறு என்று தோழர்கள் கூறுவார்களா?

சென்ற அரை நூற்றாண்டுகளுக்கு முன்பே ரஷ்யா, ட்ரான்ஸ்காக்கேசிய, உக்ரைன், பைலோ ரஷ்யா ஆகிய நான்கினமும் மற்றைய தேசிய இனங்களின் ஒருமித்த விருப்பங்களோடு ஒன்றிணைந்து சோவியத் ஒன்றியத்தை உருவாக்கின. ஒரு இனத்தையோ மொழியையோ குறிப்பதாக ரஷ்யாவின் பெயர் அமையக்கூடாது என்பதற்காக பன்னெடுங் காலமாகப் வழங்கி வந்த ரஷ்ய என்ற பெயரையே உலக வரலாற்றிலே இருந்து நீக்கிவிட்டு அங்கு வாழும் எல்லா இனங்களுக்கும் பொதுப் பெயராக "சோவியத் சோஷலிஸ ஐக்கிய குடியரசுகள்" எனச் சரித்திர முக்கியத்துவம் பெற்ற பெயரைச் சூட்டியிருக்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு தேசிய இனமும் தத்தமது தாய் மொழிகளாலேயே தம்மைப் பெருமையோடு நிர்வகித்துக் கொள்கின்றன.

இச் சோவியத் ஒன்றியத்தை யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிரதேசங்கள், தேசியப் பகுதிகள் என்ற நான்கு பிரிவுகளாகக் கண்ட லெனின், அங்கே மக்கள் சமத்துவமாக வாழ்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்ததை எம் தோழர்கள் அரசியல் புரியாதவர் லெனின் என்று சொல்வார்களா?

அன்று 1948ம் ஆண்டு மத்திய கிழக்கில் 8000 சதுர மைல்களுக்குள் ஆறு லட்சம் யூத மக்களை உள்ளடக்கி இஸ்ரவேல் என்ற ஒரு தனிநாட்டை உருவாக்கிக் கொடுத்த உங்களது முற்போக்குத் தத்துவம் இங்கே செத்தொழிந்துவிட்டதா? அதே போன்று உலகின் பல பாகங்களிலும் விடுதலைக்காகப் போராடி வரும் நாடுகளுக்கும் இனங்களுக்கும் சோவியத் நேரடியாகவும் மறைமுகமாகவும் தேவையான பல்வேறு உதவிகளையும் வாரிவழங்கி வருகின்றதே இதற்கு என்ன காரணம் என்று கூறுவீர்களா? அல்லது பொருளாதாரம் என்பீர்களா?

8000 சதுர மைல்களோடு ஆறு லட்சம் யூத மக்களுக்கு, முப்பதாண்டுகளுக்கு முன்பே ஒரு தனி நாடு சாத்தியமென்றால் — 8270 சதுர மைல்களோடு 35 லட்சம் தமிழ் பேசும் மக்கள் ஏன் ஒரு தனிநாடு காணக்கூடாது என்று சொல்வீர்களா? அன்று யூதர்கள் இஸ்ரவேலைத் தனிநாடாகக் காணும்போது அக்கினிப் பிழம்பையும் தகிக்கும் மணலையும் தவிர அங்கு வேறு எந்தப் பொருள் வளமிருந்தது? பூத்துக் குலுங்கும் கனி வளமிருந்ததா? ஆனல் இன்று அந்நாடு உலக

வல்லரசுகளுக்குச் சவால்விடும் நிலையில் வளர்ந்தெழுந்ததற்குக் காரணமென்ன ? கட்டுப்பாடுகளில்லாத தன்னாட்சிதான் என்பதை எவரும் மறுக்கமுடியுமா ?

## 5 சுண்டைக்காய் நாடுகள்

அன்று 999 சதுர மைல்களுக்குள் இரண்டரை லட்சம் மக்களை உள்ளடக்கிய ''லக்சம்பார்க்'' தன்னின எழுச்சிகொண்டு தனித்து வாழ முயன்ற போது, அமெரிக்க அரசியல் நிபுணர்கள் அதற்குத் தனியாட்சி வழங்க மறுத்துவிட்டனர். சுண்டைக்காய் நாடு — இரண்டரை லட்சம் மக்கள். பல கோடி மக்களைக்கொண்ட உலக வல்லரசுகளுக்கு மத்தியில் தன்னாட்சி சாத்தியமில்லை என்று மிரட்டினர். ஆனல் இம்மக்கள் தமது தன்னின உணர்ச்சியை விடாது, உலகப் பெரும் வல்லரசான அமெரிக்காவுக்கே சவால்விட்டு வந்தனர். அதனல் கடந்த கால் நூற்ருண்டுகளுக்கு முன்பே அமெரிக்கா அங்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்திய போது, 75% வீதமான மக்கள், அவ்வல்லரசே மூக்கில் விரல்வைத்து அதிசயப்படுமளவுக்கு தம் விடுதலைத் தாகத்தை எடுத்துக்காட்டினர். அதன் முடிவு அன்றே அது சுதந்திரத் தனிநாடு. அன்று பதினெட்டுக் கோடி அமெரிக்கர்களாலும் இந்த இரண்டரை லட்சம் மக்களின் சுதந்திர உணர்வைக் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டது.

இதேபோன்று ஐரோப்பிய வல்லரசுகளுக்கு மத்தியில் பல குட்டி நாடுகளும் பெருமையோடு தனிக் கொடி ஏந்தி நிற்கின்றன. பிரான்ஸ் ஸ்பெயின் எல்லையில் பிரனீஸ் மலையிலுள்ள ''அண்டோரா''வும் ஒரு தனிநாடு. இதன் மொத்த நிலப் பரப்பு 180 சதுர மைல்கள்தான். கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்பே ஆறுயிரம் மக்களுடன் இது தனிக்கொடி உயர்த்தியது.

ஆல்ப்ஸ் மலையிலுள்ள ''லீஸ்டென் ஸ்டைன்'' என்ற நாட்டின் மொத்த மக்கள் தொகை பதினெட்டாயிரமே. அறுபது சதுர மைல்களைக் கொண்ட இந்நாடு கடந்த கால் நூற்றுண்டுகளுக்கு முன்பே உலக வரிசையில் தனிநாடாகி விட்டது.

இத்தாலியில் ரிமினி அருகேயுள்ள ''சான்மெரிஞ'' மக்களின் நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே சுதந்திரத் தனிநாடாக இயங்கி வருகின்றது. 23 சதுர மைல்களைக் கொண்ட இந்நாட்டில் 1960ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி 15 ஆயிரம் மக்களே இருந்திருக்கின்றனர்.

மத்திய ரேகைக்குத் தெற்கேயுள்ள ''நவ்ரூ'' என்ற தீவும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பே விடுதலை பெற்றிருக்கின்றது. எட்டுச் சதுர மைல்களை உள்ளடக்கிய இத்தீவில் ஐயாயிரம் மக்கள் தான் வாழ்கின்றுர்கள்.

இதேபோன்று பிரஞ்சு – ரிவீரா எல்லையில் 360 ஏக்கரான அரை சதுர மைலுக்குள் ''மொஞகோ''

என்றதொரு தனிநாடுமிருக்கின்றது. உலகிலேயே மிகக குறைந்த மக்கள் தொகையைக்கொண்ட நாடுகளில் ஒன்முன இந்நாடு கடந்த கால் நூற்முண்டுக்கு முன்பிருந்தே உலகில் தனிநாடாகப் பீடு நடைபோட்டு வருகின்றது. இதேபோன்று இன்னும் எத்தனையோ சுண்டக்காய் நாடுகளும் – இனங்களும் தனித்துப் பெருமையோடு வாழ்வதைப் போன்றே, மேலும் பல சின்னஞ் சிறிய இனங்கள் தத்தமது தனித்துவத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்றன.

ஆறு லட்சம் மக்களுடன் அண்மையில் அமரரான மக்காரியஸ் பாதிரியார் தலைமையில் விடுதலை பெற்ற "சைபிரஸ்" நாட்டில் வாழும் ஒன்றேகால் லட்சம் துருக்கிய மக்களும் தனிநாடு காண அங்கு போராடிக் கொண்டிருக்கின்முர்கள். இதேபோன்று பலஸ்தீனத்தில் வாழும் ஐந்து லட்சம் முஸ்லிம்களும் "யாசீன் அரபாத்" தலைமையில் தனிநாடு காண ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர்.

எனவே இச்சின்னஞ்சிறிய நாடுகளும் – இனங்களும் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பே உலகநாடுகளின் எண்ணிக்கையில் தம்மையும் அங்கத்துவ நாடுகளாகப் புகழோடும் – பெருமையோடும் அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கும்போது 35 லட்சம் மக்களைக் கொண்ட தமிழினம் தனக்கென்று ஒரு நாடு கேட்பதைத் தோழர்களால் தவறு என்று எடுத்துக் காட்ட முடியுமா? இந் நாடுகளும் – இனங்களும் எந்தத் தாக்கமுமின்றிச் சுயமாகச் சிந்திக்கவும் – செயல்படவும் தனித்துவம் பெற்றுக்கொண்டதிஞல்

தான், உலகப் பெரும் வல்லரசுகளோடு உலக விவகாரங்களில் ஈடுகொடுத்து நிற்கமுடிகின்றது. ஒரு இனம் தனக்குரிய நாகரீகம், மொழி, வரலாறு போன்றவைகளைக் கட்டிக் காத்துப் பெருமையுடன் உலகிற்குத் தன்னை எடுத்துக்காட்டி வாழ்வதற்கு மக்கள் தொகையோ – பரந்து விரிந்த நிலப் பரப்போ முக்கியமானதல்ல என்பதையே இதிலிருந்து நாம் தெளிவாகத் தெரிந்துகொள்கின்றோம்.

உலகிலுள்ள எந்தச் சிறுபான்மை இனமும் – அவர்களது மொழியும் – பிரதேசமும் நசுக்கப்பட்டுச் சூறையாடப்படாது தன்னிச்சையாக வாழ முடியுமென்றால், நிச்சயமாக அந்த இனத்தில் தத்துவ மேதைகள், அறிஞர்கள், அரசியல் சாணக்கியர்கள், உலக வழிகாட்டிகள் போன்றோர் தோன்ற முடியுமென்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஒரு இனத்தினது மொழிவளர்ச்சிக்குச் சட்டபூர்வமான எந்தக் குறுக்கீடுமில்லாது அம்மொழிக்குரிய இனம் சுயமாகச் சிந்திக்கின்ற ஆற்றலைப் பெறும்போது அங்கே உலக மாமேதைகள் தடையின்றி இயற்கையாகவே தோன்றி விடுகின்றனர். அதனால்தான் அடக்கப்பட்ட எந்த இனமும் முதலில் தனது மொழியைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கின்றது – விரைகின்றது.

அன்று விடுதலைப் போராட்டம் நடாத்தி பல லட்சோப லட்ச மக்களைப் பலிகொடுத்து - இளைக்காமல் – சளைக்காமல் - தொடர்ந்து முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகக் களம் பல கண்டுவந்த அயர்லாந்து மக்களைப் பார்த்துப் பிரிட்டிஸார்

கேள்வி எழுப்பியபோது - உங்களுக்கு மொழி உரிமை வேண்டுமா? சுதந்திரம் வேண்டுமா? என்று கேட்டனர். அப்போது அயர்லாந்து மக்கள் எங்களுக்கு முதலில் மொழி உரிமையே வேண்டும். இம் மொழி உரிமை கிடைத்தால் சுதந்திரம் தானுகவே கிடைத்துவிடுமென்ருர்கள். அதேபோன்று தனது மொழி உரிமையைப் பெற்றுச் சுதந்திரத்தைத் தானுகவே பெற்ருர்கள்.

ஆகவே இக்கடுகளவு கணக்குள்ள நாடுகளும்- இனங்களும் உலகில் தனித்து வாழமுடியுமென்ருல் 8270 சதுர மைல்களோடு 35 லட்சம் தமிழ்பேசும் மக்கள் ஏன் தனித்து வாழமுடியாது? அரைச் சதுரமைலேக் கொண்ட மொனுகாவும் ஒரு தனி நாடுதான். எட்டுச் சதுர மைல்களேக் கொண்ட நவ்ரூ தீவும் ஒரு சுயாட்சி நாடுதான். 3,619,645 சதுர மைல்களேக்கொண்ட சோவியத் ஒன்றியமும் ஒரு தனிநாடுதான். இந்தச் சின்னஞ்சிறிய இனங்கள் பிரிந்து வாழ முயன்றபோது அங்கு எந்தப் பொருளாதாரமிருந்தது - நீர்வளம் - நிலவளமிருந்தது?

சிங்கப்பூர், மாலேதீவு, ஏடன் போன்ற பல நாடுகள் தமது சகல தேவைகளேயும் வெளிநாட்டிலிருந்தே பெறவேண்டிய நிலேயிலிருந்தும் அவர்கள் தனிநாடுகள் காண்பதில் பெருமை காணவில்லேயா? மாசி, கருவாடு போன்றவைகளே மட்டுமே ஏற்றுமதி செய்து குறைந்த வருவாயில் சிறந்த வாழ்வு காணவில்லேயா இவர்கள்?

## 6 உங்களையே கேட்கின்றோம்

பொதுவுடைமைத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாத உலக விடுதலை வரலாற்றுக்கு மாறுபட்டு வாழும் தோழர்கள் - எங்களைப் பார்த்து எழுப்புகின்ற ஒரு கோஸம் அருவருக்கத்தக்கதாகும். அப்பாவி இளைஞர்களைச் சிறையிலே தள்ளிவிட்டுத் தலைவர்களெல்லாம் உல்லாசமாக உண்டுகளித்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே அது. பாவம் - பரிதாபத்திற்குரிய தோழர்களே முடிந்தால் நீங்கள் சிந்திக்கவேண்டும். அல்லது பிறர் சொல்வதையாவது கேட்டுத் திருந்திக்கொள்ள வேண்டும்.

சிறையிலே இருந்தவர்கள் அப்பாவி இளஞர்களல்ல. தமிழுக்காகத் தவமிருந்த தியாகிகள். 35 லட்சம் தமிழ்பேசும் மக்களின் விடிவுக்காகத் தம்மை ஈந்த தங்கக் கட்டிகள். ஆறு கோடித் தமிழர்களுக்காக வரலாறு சமைக்கும் சரித்திர புருஷர்கள். தீரர்கள். வீரர்கள். எனவே ஒரு விடுதலைப் போராட்டப் பாதையிலே சிறையும் - சித்திரவதையும் - சவக் குழிகள் பல படைப்பதும் தம்மை ஈந்து பணயம்வைத்து நிற்கும் தியாகிகளுக்குச் சர்வ சாதாரணமானவைகள் தானே! இதைத்தானே புரட்சிக்கால ரஸ்ய வரலாற்றில் உங்களால் வரிக்கு வரி பார்த்திருக்க முடியும். அன்றைய லெனின் இன்று உயிரோடு இருந்தால்- அவரைப் பார்த்து இக் கோஷத்தைக் கிளப்புவீர்களா? எதைவேண்டுமானாலும் - எப்படி வேண்டுமா

ஞலும் பேசலாம் என்று தோழர்கள் நினைப்பது - மனித தர்மத்துக்கும் - அரசியல் பண்பாட்டிற்கும் அப்பாற்பட்ட செயலாகும்.

ஏன் - உங்களைப் பார்த்தே கேட்கின்றேன். நேர்மையிருந்தால் நெஞ்சைத் தொட்டுச் சொல் லுங்கள். 1917-ம் ஆண்டுப் புரட்சி ரஸ்யாவில் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் வாளும் வேலும் மோதிப் பலநூறு தலைகள் உருண்டு கொண்டிருந்த நேரத்தில் - துப்பாக்கிகளும் – பீரங் கிகளும் ஆயிரமாயிரம் மக்களின் குருதியைக் குடித் துக்கொண்டிருந்த நேரத்தில் -

தன்னுல் தூண்டப்பட்ட மக்கள் மலைபோல் களத்திலே துடிதுடித்துக்கொண்டிருந்த நேரத்தில்- கழுகுகளும், கரடிகளும் தன் தோழர்களின் பிணங் களைத் தின்று ஏப்பமிட்டுக் கொண்டிருந்த நேரத் தில் -

தாலியைப் பறிகொடுத்த தாய்மார்கள் – தந் தையையிழந்த பச்சிளம் குழந்தைகளெல்லாம் தெருக்களிலே வெறிநாய்களைச் சுடுவது போன்று வெறிபிடித்த ஜார் மன்னனுல் சுட்டுத்தள்ளிய நேரத்தில் ( அவர்களது ஆத்மா சாந்தியடையட் டும் ) தன்னுயிரை மட்டும் காப்பாற்றிக்கொண்டு உங்களது பூஜைக்குரிய தெய்வம் லெனின் தப்பி ஓடிப் பின்லாந்தில் ஒளிந்துகொண்டதை இவ்வளவு கெதியில் நீங்கள் மறந்துவிட்டீர்களா ? ஆனுல் - லெனின் தப்பியோடியது சரியா - பிழையா என் பது வேறு விசயம். ஏனெனில் அவரின் சக்திக்கும்

திறமைக்கும் எப்போதுமே முக்கியத்துவம் கொடுத்து அவருக்கு மதிப்பளித்து வருபவர்கள் நாங்கள்.

கூட்டணித் தியாகிகளான தலைவர்கள் வீர நெஞ்சங்கொண்ட இளைஞர்களைக் காரணமில்லாது சிறைக்குள் தள்ளிவிட்டு எங்கையுமே ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. அல்லது மாறுவேடம் பூண்டு மறைந்து வாழவில்லை. தமிழுக்காக – தமிழனின் தன்னாட்சிக்காக அடுத்தடுத்துப் பல மாதங்கள் – ஆண்டுகள் சிறைகண்டு சித்திரவதைகள் பெற்று தியகத் தழும்பேற்றிக் கொண்டவர்கள்தான் கூட்டணி வாதிகள். ஏன் இன்றும் – என்றுமே எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் சிறைகாண– கொடும் சித்திரவதை காண – உயிரைப் பணயம் வைத்திருப்பவர்கள்தான் எமது தியாகத் தலைவர்கள்.

கூட்டணியினரின் பயணம் உங்கள் பயணத்தைப் போன்றதல்ல. பிரெஞ்சுப் புரட்சித் தந்தை வால்டேரின் பயணத்தைப் போன்றது. ரஸ்யத் தந்தை லெனினின் நம்பிக்கையைப் போன்றது. அது ஈழத் தமிழினத்தின் நம்பிக்கைக்குரியது. தமிழீழம் அடைந்தே தீருவோம் என்ற துணிவுக்குரியது.

பிறந்துவிட்ட மனிதன் இறப்பது ஒருமுறை தான் – அது எமதினத்தின் விடிவுக்கான இறப்பாக இருக்கட்டும் என்ற பிரார்த்தனைக்குரியது. எமது நெஞ்சைத் தின்னும் மண்ணிலே முளைக்கும் புல் பூண்டுகள் கூட தமிழீழம் என்ற முழக்கத்துட

னேயே தழைத்துப் போராட வேண்டுமென்ற ஆசைக்குரியது அது. அதைத் தடுக்க நீங்கள் பேசும் குதர்க்க வாதத்தால் எத்தனை பிறவி எடுத்தாலும் இறுதியில் அது செயலிழந்ததாகவே முடியும் என்பதை முப்பதாண்டுகளுக்கு முன்பே நீங்கள் உணர்ந்திருக்க வேண்டும். எனவே தான் தோழர்களே முடிந்தால் திருந்திக் கொள்ளுங்கள். இல்லையேல் தமிழினத்தின் விடுதலைப் பாதையை விட்டு ஒதுங்கிக் கொள்ளுங்கள் என்று அரசியல் பண்பாட்டுடன் – தந்தை செல்வா வழியில் நின்று கேட்கின்றோம். எங்களோடு உங்களையும் ஈன்றெடுத்த எம் தமிழன்னையின் பெயரால் வேண்டுகின்றோம்.

எனவே – மக்களின் உணர்ச்சிகளையும் – உத்வேகங்களையும் சரியான நேரத்தில் உணர்ந்து பணியாற்றத் தவறியவர்களை அம் மக்கள் தம் மத்தியில் நின்றும் விரட்டியதைத் தவிர, இதுவரை அவர்களுக்கு வேறு வழியே இருந்ததில்லை என்பதைத்தான் வரலாற்றிலே இருந்து நாம் படித்திருக்கின்றோம். அன்று பிரிட்டீஸ் மக்களின் எண்ணங்களுக்கும் – தேவைகளுக்கும் மதிப்புத் தர மறுத்து நினற மன்னன் ''சார்லஸ்'' சிரச்சேதம் செய்யப்பட்டிருக்கின்றார். இரண்டாவது ஜேம்ஸ் மன்னனின் மணிமுடி பறிக்கப்பட்டு நாட்டை விட்டே துரத்தப்பட்டிருக்கின்றார். மன்னாதி மன்னர்களென்றாலும் மக்களின் தீர்ப்புக்கு முன்னே மண்டியிட்டுத் தானாக வேண்டும் என்பதல்லவா இதிலிருந்து நாம் தெரியும் உண்மையாகும்.

பல கோடி மக்களால் அன்று புகழப்பட்டு வந்த அபுல் கலாம் ஆசாத் விடுதலைப் போர் நடத்திய இந்திய முஸ்லிம்களின் உணர்ச்சிகளுக்கு மாறுகத் தன் கொள்கையைத் தலைவன் என்ற இறுமாப்போடு தனிவழி நடத்த எண்ணியதால் அவருக்கு மாலையிட்ட பல கோடிக் கரங்கள் மண்ணை வாரித் தட்டியிருக்கின்றன.

மாபெரும் சாம்ராஜ்யத்திற்கே மாமன்னராக இருந்த இபுருகிம் அவர்கள் சாதாரண ஒரு ஓட்ட ஓட்டியின் எழுச்சியைக் கண்டு சிரம் தாழ்த்தித் தன் அரச போகத்தையே துறந்து துறவியாகத் தோட்டங்களிலே வேலை செய்து வந்திருக்கின்றார்.

எகிப்திய மக்களின் விடுதலை உணர்வால் மன்னர் பாரூக் மணிமுடியிழந்து நாடு பெயர்ந்திருக்கின்றார். ஆகவே இப்படியான பன்னூறு வரலாற்றுக் குறிப்புக்களைத் தான் ஒரு இனத்தின் விடுதலைக்கு எதிராக - ஈனத்தனமாக இயங்குபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் கூட்டணியினர் இப்படியான பலாத்காரத்தில் என்றைக்குமே நம்பிக்கை வைத்துச் செயற்பட்டவர்களல்ல. தந்தை செல்வா காட்டிய அறப்போர்க் களத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு செயற்படும் நாங்கள் எங்களது விடுதலையை அடைந்தே தீருவோம்.

அன்று மார்க்ஸ் கண்ட இச் சோஸலிஷ சித்தாந்தம் உலகில் அதிக சக்தி கொண்டது என்பதனுலேயே பல கோடான கோடி மக்களேயும் -

பல நாடுகளையும் தன்னகத்தே ஈர்த்து வைத்திருக்கின்றது. இலங்கை போன்ற சில நாடுகள் லெனினின் குருநாதரான மார்க்சின் இத் தத்துவத்தைத் தம் சுயதேவைகளுக்கும்-வேண்டியவர் என்ற குறுகிய எண்ணங்களுக்குமாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதினாலேயே இங்கு இத்தத்துவம் மாசு தேடிக் கொண்டிருக்கின்றது. இச் சித்தாந்தம் உலக முக்கியத்துவம் பெற்றுப் புகழடைவதற்கு மார்க்ஸ் தன்னைச் சுற்றியுள்ளோர்களின் வாழ்க்கை முறைகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து செயல் பட்டதே காரணமாக அமைந்தது. அதற்கேற்ற அவகாசமும் – சூழ்நிலையும் - இட அமைப்பும் - மனப்பக்குவமும் ஒரே நேரத்தில் மார்க்சுக்கு உதவிகளாக இருந்தன. லண்டன் சேரிப் பகுதியிலே குடியிருந்த மார்க்ஸ் தன் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்த்தார். நன்றாகப் பார்த்தார். அங்கே மக்களின் அடக்குமுறைகள், பஞ்சம், பசி, பட்டினி ஆகியவைகளைக் கண்டார். அதனாலெழுந்த சிந்தனைதான் அவரின் இத் தத்துவமாகும்.

மார்க்ஸ் கண்ட இச் சோஸலிஸ சமத்துவத்தில் குடும்பப் பாசம் திணிக்கப்பட்டதில்லை. கொள்கைப் பாசம் தான் அங்கே புகுத்தப்பட்டிருக்கின்றது. தன்னைச் சார்ந்தவர்களுக்கும் - குடும்பத்தவர்களுக்கும் மட்டுமே அரசியலில் விளம்பரமும் புகழும் தேடிக்கொடுக்க வேண்டுமென்று அவர் தவறியும் கூட நினைத்ததில்லை. ஆனால் இங்குள்ள பொதுவுடைமைத் தோழர்கள் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே வாய்ப்புக்கள் தேடிக் கொடுப்பதில் மார்க்

ஸின் சிந்தாந்தங்களைச் சாக்கடையாக்கி விட்டிருக் கின்றனர்.

தேசிய இனங்களின் கட்டுப்பாடுகளில்லாத வளர்ச்சிக்கு மதிப்பளித்து முக்கியத்துவம் கொடுத் திருக்கும் மார்க்சுக்கு உரிமை கொண்டாடும் எம் தோழர்கள் வஞ்சகம், பொறாமை, பொச்சரிப்புப் போன்றவைகளை உமிழும் காலத்தால் பட்டொ ழிந்து போய்க் கொண்டிருக்கும் பத்தாம் பசலித் தனமான கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கொண் டிருக்கின்றார்கள். மார்க்ஸ் காட்டிய சோஸலிஸம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோஷத்தோடு அடக்கப்பட்ட இனங்களை இதய சுத்தியோடு வாரி அணைத்து ஆறுதல் கூறியிருக்கின்றது. பிளந்தவை களை பிணையத் தூண்டியிருக்கின்றது. சுயநலமில் லாத கொள்கைக்காகவே பீடு நடை போட்ட மார்க்ஸ் தன் சித்தாந்தம் ஒரு குறுகிய வட்டத் திற்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டுமென்று நினைத்ததேயில்லை. அதை அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

தன் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர் களை விரும்பி அணைத்துக் கொண்டார். அங்கே அதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களை இழுத்துப் பிடித்துக் கொள்ள இரும்பாலான இதயம் மட் டும்தான் தேவை என்று அவர் அடம்பிடிக்க வில்லை. சிலதைச் சாதிக்கப் புரட்சியும் பிடிவாதக் குணமும்தான் தேவை என்று தன் முரட்டுத் தனத்தையும் காட்டிக் கொண்ட மார்க்ஸ் - ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள்

வாழக்கூடாது • அப்படி வாழ்ந்தாலும் அவர்களுக்குரிய உரிமைகளை விட்டுக் கொடுக்கவே கூடாது என்று தவறியும் கூட அவர் சொல்லவில்லையே! தேசிய இனங்களின் மதிப்புக்குரிய மாண்புகளுக்கு தன் உள்ளத்தின் ஆழத்தால் மதிப்புத் தந்த அவர் மக்கள் மக்களாகவே உரிமை பெற்று வாழ வேண்டுமெனக் கண்டிப்பாகக் கூறியிருக்கின்றார். வீம்பும் • வீருப்பும் பேசி என் கொள்கையை மாசுபடுத்தாதீர்கள் என்று வற்புறுத்திய அவரிடம் – அடக்கமும் அமைதியும் நிரந்தரமாகவே குடி கொண்டிருந்தது.

அவருக்குச் சொந்த எதிரிகள் வாழ்க்கையிலே இருந்ததில்லை. எதிர்க் கருத்துக்களை எடுத்துக்காட்டித் தன் சித்தாந்தத் தவறுகளை உணர்த்தியவர்களைத்தான் அவர் வாழ்விலே சந்தித்திருக்கின்றார். அவைகளைத் தன் தெளிவுக்காக ஏற்றுக் கொள்ளவும் செய்திருக்கின்றார். பிரௌதான், பக்குனின் போன்ற தர்க்கவாதிகளின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்கத் திணறிய மார்க்ஸ், அவர்களின் விவாதங்களுக்குத் தலை வணங்க மறுக்கவில்லை.

உலகப் பெரும் கொள்கைவாதி என்ற இறுமாப்பு அவரிடம் இருக்கவில்லை. அதே போல் அவரை ஒரு சித்தாந்தத் தலைவன் என்று அவரை நம்பிய மக்கள் புகழும் இடம் வரும்போது அவர் உயிருடனிருக்கவில்லை.

எனவே மார்க்ஸின் சக்திக்கு மதிப்பளிக்கும் நாங்கள் எப்போதுமே அவரின் கொள்கையைப்

பூரணமாக ஏற்றுக் கொண்டவர்களல்ல என்பதையே தோழர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

தத்துவங்களால் உலகில் பெரும் மாற்றங்கள் நிகழ்வதில்லை. உலகில் நிகழும் கெடுபிடிகளாலும்-அடக்குமுறைகளாலும்தான் தத்துவங்கள் உருப்பெற்று மக்களை ஆட்கொள்ளுகின்றன. எனவே கம்யூனிஸம் ஒரு தத்துவம் என்பதற்காகவல்ல-அரசியல் நெருக்கடிகளால் - இயந்திர வளர்ச்சிகளின் போட்டிகளால்-பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் புழுக்கம் போன்றவைகளால்தான் கம்யூனிஸம் இன்று இலங்கையில் ஒரு சிலர் மத்தியில் காலூன்றியிருக்கின்றதேயல்லாமல் தன்னின உணர்வால் உந்தப்பட்ட மக்கள் மத்தியில் இத்தத்துவம் நினைவாகக்கூட நிலைகொள்ள முடியவில்லை. கம்யூனிஸம் வரும்போது நடக்கும் புரட்சி மக்கள் விரும்பும் ஜனநாயகப் புரட்சியாக இருக்க முடியாது. குருதி கொட்ட வேண்டிய வன்முறைப் புரட்சியாகத்தான் அது அமையும். உலக நாடுகளிலே இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் பாடமும் அதுதான்.

பசியும் - பட்டினியும் - வர்க்க வேறுபாடுகளும் வளர்ந்தெழுவதற்கு இன்றைய ஆட்சியாளர்கள் கடைப்பிடித்துவரும் அருவருக்கத்தக்க கொள்கைகளே காரணமாக அமைந்திருக்கின்றன. மக்கள் மத்தியிலே ஜீரணிக்க முடியாத-லெனினிஸத்திற்கு மாறுபட்ட ஒரு சித்தாந்தத்தைக் காட்டி வர்க்கம் வர்க்கம் என்று கூச்சலிடுகின்றனர். பொதுவுடைமை மலர்ந்தால் மக்கள் வாழ்வும் நிரந்தரமாக மலர்ந்து

விடும் என்று எங்கோ இருக்கின்ற சோவியத் ஒன்றியத்தைக் காட்டி - அதன் நீர் நிலவளங்களை மறந்து - அதன் அரசியல் சட்டத்தை மறைத்து அப்பாவி மக்கள் மத்தியிலே பவனிவரக் கனவு காண்கின்றனர். ஆனல் எல்லோருமே பொருளாதார ரீதியில் சமமான வாழ்வைப் பெறக் கிடைத்துள்ள ஒரே வழி கம்யூனிஸம்தான் என எண்ணுகின்ற முற்போக்காளர்கள் கூட ஒரு வகையில் கம்யூனிஸ ஆட்சியை எண்ணி அஞ்சத்தான் செய்கின்றனர். ரஸ்யா, சீன போன்று உலகப் பொதுவுடைமை நாடுகளில் வாழும் மக்கள் பூரணமான மனித சுதந்திர மின்மையால் வெறும் உணவுக்காக மட்டும் உழைக்கும் மனிதப் பிராணிகளாகவே வாழ்கின்ருர்கள் எனபதை நாம் அறியும்போது - வாய் பொத்திக் கைகட்டி மரக்கட்டையாக வாழ்ந்து மறைவதைவிடச் சுதந்திரமாகப் பட்டினி கிடந்து மடிவதே மேல் என்ற முடிவுக்குத்தான் நாமெல்லோரும் உணர்ச்சி பீறிட வருகின்ருேம்.

ஜனநாயக சித்தாந்தத்தைப் பொறுத்தவரையில் மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இருந்து வருவது தவிர்க்கமுடியாத ஒன்றுதான். நல்ல வாய்ப்பு - வசதிகளோடு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கூட, இதைவிட ஒரு உயர்ந்த வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையே என்று ஏங்குவது பலருக்குத் தவிர்க்க முடியாத ஒன்ருகவே இருந்து வருகின்றது. ஏனெனில் — மனிதன் சமூகமாக இணைந்து வாழ ஆரம்பித்ததிலிருந்து மற்றவர்களை விட உயர்ந்த நிலையில் வாழ வேண்டு

மென்று எண்ணிப் பழக்கப்பட்டு வந்தவன் அப்படி உயர்ந்த நிலையில் - விரக்தியடைந்து துன்பப் பட்டவனது மனதில் ஏற்பட்ட வெறிதான் பொதுவுடைமை என்ற சொல்லை எம் தோழர்கள் மத்தியிலே உச்சரிக்கச் செய்திருக்கின்றது.

ஆனால் பொதுவுடைமை நாடுகளில் ஒருவன் தன் சுயதேவைகளைப் பற்றி விரிவாகச் சிந்திக்க முடியாத காரணத்தால் அவன் எதிலுமே ஆசைப் படுவதில்லை. அதனால் அங்கே தனிப்பட்டோர்களின் தேவைகளும் - பிரச்சனைகளும் அழிக்கப்பட்டு விட்டன. இதில் ஜனநாயக நாடுகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்டவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிச்சயமாக அரசு செவி சாய்க்க வேண்டியதாயிருக்கின்றது. அதனால் இங்கு புதிய புதிய தேவைகளும் - பிரச்சனைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆதலால் ஜனநாயகம் நாட்டுக்குத் தேவையில்லை என்று இதனால் கூறிவிட முடியுமா?

எனவேதான் தோழர்களுக்குச் சொல்கின்றேன். நீங்கள் பேசும் கம்யூனிஸம் லெனின் காட்டிய அரசியல் தத்துவத்திற்கும் சோஸலிஸத்திற்கும் மாறுபட்டு நிற்பதால் - உங்களது தன்மான உணர்ச்சியை உணர்ந்து - தமிழினத்தின் விடுதலைப் பாதையில் புனிதத்துவத்தோடு இணைந்து கொள்ளுங்களென்று!

நன்றி.

## தந்தை செல்வாவின் நல்லாசி



கே. எஸ். ஏ. கபூர் அவர்கள் மன்னார் பகுதியில் எமது இயக்கத்துடன் மிக நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டு உழைத்து வருபவர் மட்டுமல்ல — எம் தமிழரசின் குறிப்பிடத்தக்க பேச்சாளர்களில் ஒருவருமாவர். பிரச்சினைகள் எதுவானாலும் வரலாற்று ஆதாரங்களுடன், மக்களின் சிந்தனையைக் கவரக்கூடியவாறு கருத்துக்களை ஒழுங்குபடுத்தி அழகாகப் பேசுவதில் சிறந்தவர். இதே போன்று உரிமைகோரி நிற்கும் தமிழ் பேசும் மக்களின் எண்ணங்களை அழகு தமிழிலே வடித்துக் காட்டுவதிலும் தனக்கென ஒரு தனிவழி கண்டவர்.

இப்பேச்சிலும், எழுத்திலும், தன் செயற்பாடுகளிலும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போன்று எப்போதுமே இவர் இயக்கத்தின் கோட்பாடுகளை மீறியது கிடையாது. தன் பிஞ்சுப் பருவத்திலேயே 1956ம் ஆண்டு காலிமுக மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின்போது காடையர்களின் தாக்குதல்களால் அன்று இவர் சிந்திய உதிரம் எனது இருதயத்தில் நின்று பாய்ந்த உதிரமாகும்.

இவரது இப்பணிக்கும், துணிவுக்கும் என்றும் எனது நல்லாசி உரித்தாகட்டும்.

☐ 7-7-1960 திருமலை பெரிய மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது தந்தை செல்வா கூறியவையாகும்.

செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்